Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 7 ஆம் நாள் ஜ. ஆகிர் 13 (22-11-61) புதன்கிழமை இதழ் 240

நாவிற்கு ருசியும்
உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

# 4 எம். பி.க்கள் மீது 7 குற்றச்சாட்டு

## நீதிபதியின் கேள்விக்கு எதிரிகள் மௌனம்

### கோர்ட்டில் ஜனத்திரள்; விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த நான்கு எம். பி.க்கள் மீதும் ஒரு வழக்கறிஞர்மீதும் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றத்தின் உள்ளும் புறமும் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

இவர்கள் ஐவர்மீதும் சாட்டப்பட்டுள்ள ஏழு குற்றச்சாட்டுக்களையும் நீதிபதி வாசித்துக் காட்டினார். எதிரிகள் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ளவுமில்லை; மறுக்கவுமில்லை. நீதிபதி கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவர்கள் பதிலளிக்காமல் மௌனமாக நின்றனர். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை.

நான்கு எம். பி.க்கள் மீதும் ஒரு வழக்கறிஞர் மீதும் தொடரப்பட்டுள்ள வழக்கைப் பார்ப்பதற்காக நீதிமன்றத்தினுள்ளும் வெளியும் பெருந்திரளானமக்களும் வழக்கறிஞர்களும் குழுமியிருந்தனர்.

யாழ்ப்பாண பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஆர். வி. டி' நீஸ் தொடர்ந்துள்ள இவ்வழக்கில் ஐவர் மீதும் ஏழு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

(1) கச்சேரிக்குள் செல்பவர்களையும் கச்சேரிக்குள்ளிருந்து வெளியே வருபவர்களையும் முறைகேடான முறையில் தடுக்கும் நோக்கத்துடன் சட்டவிரோதமாகக் கூடியதாகவும் (2) சி. ஆர். ஆர்ண்ட் என்பவரைக் கச்சேரிக்குள் செல்லவிடாமல் முறைகேடாகத் தடுக்க சட்டவிரோதமாகக் கூடியதாகவும், (3) கச்சேரிக்குள்ளிருந்து வெளியே வருவதற்கு முயற்சி செய்த திரு. எம். ஸ்ரீகாந்த என்பவரை முறைகேடாகத் தடுக்க சட்டவிரோதமாகக் கூடியதாகவும் (4) இதே நடவடிக்கையின் போது சட்டவிரோதமாகக் கூடியவர்களில் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ முன் கூறப்பட்ட திரு. சி. ஆர். ஆர்ண்ட் என்பவரைக் கச்சேரிக்குள்ளிருந்து வெளியே செல்லவிடாமல் முறைகேடாகத் தடுத்ததாகவும் (5) சி. ஆர். ஆர்ண்ட்டை கச்சேரிக்குள் செல்லவிடாமல் முறைகேடாகத் தடுக்கும் ஒரே நோக்கத்துடன் தடுத்தாகவும், (6) எம். ஸ்ரீகாந்தாவை கச்சேரிக்குள்ளிருந்து வெளியே செல்லவிடாமல் தடுக்கும் ஒரே நோக்கத்துடன் தடுத்ததாகவும் (7) இதே நோக்கத்துடன்சி. ஆர். ஆண்ட்டைர் கச்சேரிக்குள்ளிருந்து வெளியே செல்லவிடாமல் முறைகேடாகத் தடுத்ததாகவும் (1) திரு ஏ அமிர்தலிங்கம் எம். பி., (2) டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் எம். பி., (3) திரு. வி. ஏ. கந்தையா எம். பி., (4) திரு. வி தர்மலிங்கம் எம். பி., ஆகிய நான்கு தமிழரசுக்கட்சி

(5 பக்கம் பார்க்க)

## எம். பி.க்கள் சார்பில் ஆஜராவது யார்?

### ஜனவரியில் இறுதி முடிவு நீதிமன்றத்தில் காட்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நான்கு எம். பி.க்கள் மீதும் ஒரு வழக்கறிஞர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கை எதிர்த்து வாதாடுவதா? அவர்கள் சார்பில் எந்த வழக்கறிஞர்களை ஆஜர் செய்வது?

இவை சம்பந்தமாக 1962ம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்தில் இறுதியாகத் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்டதும் இதன் விபரம் உடனடியாக கொழும்பிலிருக்கும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு 'டெலிபோனில்' தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக நேற்றுக் காலை 9-25க்கே திரு. அமிர்தலிங்கம் வந்து சேர்ந்தார். இதன் பின்னர் மற்றவர்கள் வந்து சேர்ந்தனர்.

எதிரிகள் ஐவரும் வாடிவீட்டிலிருந்து மேயர் துரைராஜா, உதவி மேயர் நா. த. செல்லத்துரை மற்றும் மாநகர சபை அங்கத்கவர்கள், உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம் சகிதம் நீதிமன்றத்துக்கு வந்து சேர்ந்தனர்.

நீதிபதி தமது ஆசனத்துக்கு சரியாக 9-40க்கு வந்து சேர்ந்தார். 9-50 க்கு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகளில் ஒருவரான டாக்டர் நாகநாதன் பூரண மேல்நாட்டு உடையிலும், திரு. அமிர்தலிங்கம் வேட்டி, நாஷனல், மடிப்புக்கலையா தசால்வையுடனும், திரு. வி. தர்மலிங்கம் வேட்டி நாஷனல் 'கறுப்பு மப்ளர்' சகிதமும், திரு. வி. ஏ. கந்தையா வேட்டி, நாஷனல், சால்வையுடனும், திரு. நடராசா வேட்டி, நாஷனலுடனும் நீதிமன்றத்தில் ஆஜரானர்கள்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம், ச்ாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம்,, திரு. வி. நவரத்தினம் ஆகியோர் வழக்கறிஞர் உடையில் வந்திருந்தனர். யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் நீதிமன்றத்தில் இருந்தார்.

## பிரச்னையில்லாத பஸ்கள் அனுப்பவேண்டும்

### இ. போ. ச. பிரதேச கமிட்டி கோரிக்கை

மாவிட்டபுரம், புதன்

யாழ்ப்பாணம் கச்சேரியில் சென்ற 18-ம் திகதி கேணல் உடுகமை தலைமையில் நடைபெற்ற இ. போ. ச. பிரதேச ஆலோசனைக் கமிட்டியில் கீழ்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. கிராமப் புறங்களில் பஸ் நிறுத்துமிடங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

கீரிமலை சந்தியில் பஸ்களை நிறுத்தாது கிராம சபையால் நிறுவப்பட்டுள்ள பஸ் நிலையத்தில் பஸ்களை நிறுத்த வேண்டுமென தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

இ போ. ச வில் கடமையாற்றும் பஸ் ஊழியர்கள் வருடத்துக்கு இரு முறை இலங்கையைச் சுற்றிப் பார்க்க இலவச பாஸ்கள் வழங்கப்பட வேண்டும். அவ்விதம் வழங்கப்பட்டால் ஒரு பகுதியிலுள்ளவர் மற்றப் பகுதியிலுள்ள பஸ் போக்குவரத்து வசதிகளை அறிந்து கொள்ள முடியும்.

அச்சடிக்கப்பட்ட பாக்கெட் நேரசூசிகை பொது மக்களுக்கு மலிவான விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

பஸ் ஊழியர்கள் பிரயாணிகளுடன் மரியாதையாகப் பழக வேண்டும்.

யாழ்ப்பாண மேயர் கருத்து வெளியிடுகையில் மாதிரி பஸ் நிலையமொன்றை நிறுவுவதற்கான திட்டங்கள் தயாராக உள்ளன என்று குறிப்பிட்டார். தற்பொழுது இருக்கும் பஸ் நிலையத்தில் பொது மக்கள் மழைக் காலங்களில் அவஸ்தைப்படாதிருக்க சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். இங்கு பிரச்சினையைக் கிளப்பாத வகையில் பஸ்களை விரைவில் அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனே செய்தி அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கடலோரப் பாதை ரயில்கள் நின்றுவிட்டன!

### இஞ்சின் உருளை வெடித்தது!

பாணந்துறை, செவ்வாய்

இன்று காலை காலி எக்ஸ்பிரஸ் ரயில் பாணந்துறை பாலத்தில் செல்லுகையில், இஞ்சினில் ஓர் உருளை திடீரென வெடித்தது. இரும்புத் துண்டுகள் ஆற்றிலும் பக்கத்திலும் விழுந்தன. ஒரு துண்டு பெரிய தண்ணீர் குழாயைப் பொத்துவிட்டதால், தண்ணீர் குபீரென்று வெளியில் வந்தது. நல்ல வேளையாக இரும்புத் துண்டுகள் பாதையில் விழாமல், ஆற்றில் விழுந்ததென்றும் பாதையில் விழுந்திருந்தால் அதிக சேதமேற்பட்டிருக்குமென்றும், இஞ்சின் டிரைவர் தெரிவித்தார்.

இந்த விபத்து காரணமாக இன்று காலை கடற்கரை ரயில்கள் எல்லாம் ஓடாமல் நின்றுவிடவேண்டியதாயிற்று.

## பென்ஷன் பெறுவதா சேவை செய்வதா?

### வைத்திய நிபுணர் தீர்மானிப்பர்

கொழும்பு, செவ்வாய்

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் தனிப்பட்ட தொழில் நடத்துவது நிறுத்தப்பட்டால் வைத்திய நிபுணர்கள் அரசாங்கம் வழங்கஇருக்கும் பென்ஷனைப் பெற்று ஓய்வு பெறுவதா அல்லாவிடில் தொடர்ந்து சேவை செய்வதா என்பதுபற்றி வைத்திய நிபுணர்கள் மீண்டும்கூடி தீர்மானிக்கவிருக்கின்றனர்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

ஆசிரியருக்குக் கடிதம்

## மடாலயப் பழமை

நமது தமிழகத்தில் தேவாலய மடாலயங்கள் மிக்கப் பழமை வாய்ந்தன. கடவுட் கொள்கை மக்களுக்கு இயற்கையாக அமைந்திருந்தது. திருக்கோயில் வழிபாடு தமிழ் மக்கள் கைக்கொண்டமையை தமிழ் நூல்கள் பல விளக்குகின்றன. தேவாலய அமைப்பு ஆகமங்களில் காணப்படும். அதன் புற வீதிகளில் பாரத நாட்டிலும் சரி, ஈழமண்டலத்திலும் சரி முன்னோர் மடங்களை அமைத்து வைத்தனர். திருமூல நாயனர் மடாலய வரலாறு திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

சமயம் வளரப் பன்னூல் தந்தவர்கள் சந்தான பரமாசாரியர்கள். சந்தானம் அகச் சந்தானம், புறச் சந்தானம். என இரு திறப்படும். புறச்சந்தான பரம்பரைதான் திருவாவடுதுறை. தருமபுரம் முதலிய ஆதீனங்கள். ஆங்கே துறவிகள் வழிவழியாகச் சமய பரிபாலனஞ் செய்வதைத் தமிழ்மக்கள் அறிவர் ஈழநாட்டில் முக்கிய ஆலயங்கள் பல சிவாலயம், குமாராலயம் விசேடித்துக் கூறத்தக்கன. பாரதநாட்டிலும் மடாலயங்கள் மல்கியுள்ளன. முருகப்பெருமானின் பேரருள் நமது சமயிகள் அறிந்ததே. அடியார்கள் தரிசித்துத் தங்கப் பல மடங்கள் நிரம்பியது ஒரு தலம். அதுதான் முருகப் பெருமான் கருணை பொழி கதிர்காமமாகும் இங்கே ஆங்கில அரசாட்சி காலத்தில் வதுளையிலிருந்து (ஏஜண்டு) மகாண அதிபர் கதிர்காமத்திற்கு வந்து தரிசனார்த்திகளுக்கு வேண்டி வசதிகள் செய்தார்கள். தற்கால அரசாங்கமும் இதுவரையில் கதிர்காமத் தொண்டர்களுக்கு உதவி செய்வதில் தவறவில்லை. ஆனல் காலம் மடாலயங்களில் இன்று அதாவது அவைகளை எடுக்க நினைப்பதாக அறிகின்ருேம் அது மிகவும் கெடுதியான காரியம். தமிழ் மக்களுக்கும் சிங்களச் சகோதரர்களுக்கும் ஒற்றுமை வளர வேண்டும். பொது அறச்சாலைகள் இன்னும் அதிகமாக வேண்டும். ஆகவே எந்த மடாலயத்தையும் அளிக்க வராது செழிக்கச் செய்வது அரசாங்கத்தில் முக்கிய கடமையாகும். சபைகளும் இதில் கண்ணும் கருத்தும் செலுத்துவது குற்றமாகாது.

வ. மு. இரத்தினேஸ்வரஐயர்
(தமிழ்பண்டிதர்)
யாழ்ப்பாணம்

# 'நோயாளரின் மனதுக்கும் ஆறுதல் அளிக்கவேண்டும்'

கண்டி, திங்கள்

'தாதிமார்கள் நோயாளர்களின் உடல் நோயை மாற்ற உதவுவதோடு அவர்களின் மனத்துக்கும் ஆறுதல் அளிக்க வேண்டும். தாதிமார்களுக்கு ஆற்றலும் தேர்ச்சியும் இருந்தால் மட்டும் போதாது பணி புரிவதில் தளராத விருப்பமிருக்கவேண்டும்.'

இவ்வாறு பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய தாதிமார் மகாநாட்டை இங்கு ஆரம்பித்து வைததுப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

அனுபவம் வாய்ந்தவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றி தமது பிரச்சினைகளைத் தாதிமார்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும். தாதிமார் எங்கிருந்தாலும் அவர்களின் சேவை ஒரே மாதிரியானதாகவே இருக்கும். சேவைக்கே தம்மை அர்ப்பணிப்பதில்தான் தாதிமாரின் பெருமை தங்கியுள்ளது.

பிரதமர் தமது பேச்சில் டாக்டர் மணியின் சேவைபற்றிப் பாராட்டினர்.

---

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 10 வது வருடாந்தக் கூட்டம்

கொழும்பு, திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 10 வது வருடாந்தக் கூட்டம் டிசம்பர் 2ம் திகதியன்று இரத்தினபுரி சீவாலி வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. கட்சியின் கொடியேற்றத்துடன் காலை 9.15 மணிக்குநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

கட்சித்தலைவர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு வித்தியாலயத்தின் வாசலில் வரவேற்பளிக்கப்படும். நிர்வாகக்கமிட்டி அங்கத்தவர்களும், ஏனையோரும் பிரதமருக்கு வரவேற்பு உபசாரமளித்து கூட்டம் நடைபெறவிருக்கும் மண்டபத்துக்கு அழைத்துச் செல்வர்.

வரவேற்புக் கமிட்டித்தலைவர் பிரதமருக்கும் ஏனையோருக்குமான வரவேற்புரையொன்றை நிகழ்த்துவார். பிரதமரின்சொற்பொழிவுக்குப்பின்னர் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் தீர்மானங்கள் விவாதிக்கப்படும். மத்தியான ஓய்வு நேரத்துக்குப் பின்னர் 1.-30 மணிக்கும் கூட்டம் தொடர்ந்து நடைபெறுமெனத்தெரிவுறது. இதன் பின்னர் கூட்டத்தில்நிர்வாகக் கமிட்டி, தெரிவிசெய்யப்படும்.

மாலை 6மணிவரை தீர்மானம் பற்றிய விவாதங்கள் நடைபெறும். சர்வதேச விவகாரங்கள் உட்பட 8 தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட விருக்கின்றன எனத் தெரிகிறது. கூட்டத்தின் இரவன்று கொண்டாட்ட நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## வடிகாலுக்குள் வரி விபரப் பட்டியல்

காலி, திங்கள்

காலி நகரசபைக்குச் செலுத்தப்படவேண்டிய மின்சார வரியைச் செலுத்தாத் தவறியவர்களின் வரி விவரப்பட்டியல்கள் காலிக்கோட்டையிலுள்ள வடிகால் ஒன்றினுள் மறைந்து கிடக்கக் காணப்பட்டன. சுமார் 125 பேர்களின் பட்டியல்களை வடிகாலுள் கண்டெடுத்தவர் நகரசபை ஆணையாளர் திரு. கே. சண்முகத்திடம் அவற்றைக் கொண்டு சென்று ஒப்படைத்தார்.

பட்டியல் நூற்றிருபத்தைந்தும் சாக்கடையில் சென்ற மர்மம்பற்றி நகரசபை ஆணையாளர் விசாரணை நடாத்திவருகிருர்.

மின்சார வரி செலுத்தாதவர்களுக்கு ஒரு மாத காலத்துக்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட வரி விபரப்பட்டியல்களும் வடிகால் ஒன்றினுள் முனனர் காணப்பட்டன. இநீதப் பிரச்சினைக்குக் காலி நகரசபை பரிகாரந் தேடத் தீர்மானித்துள்ளது. பிரஸ்தாப வரிப்பட்டியல்களை விசேஷ 'கமிஷன்' பணம் வழங்கித் தபால் மூலம் அனுப்பி வைப்பதென நகரசபை உத்தேசித்துள்ளது.

# விலைமதிப்புடைய பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கவேண்டும்

### கலாச்சார மந்திரி ஆலோசனை

கண்டி, திங்கள்

மாலிகாவின் மூன்ரும் மாடிக்கட்டு, பழைய சிங்கள மன்னரின் விலைமதிப்புடைய பொருள்கள் சிலவற்றின் நிரந்தர கண்காட்சிக்கு ஒதுக்கப்படவேண்டும் என கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அண்மையில் கண்டி மாலிகவாவுச்கு விஜயம்செய்த பின்னர் கூறியுள்ளார். பழைய கண்டி அரசர்களின் உடைகளையும் அவர்கள் உபயோகித்த பொருள்கள் சிலவற்றையும் அங்கு நித்திய கண்காட்சிக்கு வைக்கலாம் என திரு. சேனநாயக்கா ஆலோசனை கூறியுள்ளார். இவ்விஷயம் பற்றி மந்திரி மாலிகாவா நிலாமே எச். எல். ரத்வத்தேயுடன் கலந்தாலோசனை செய்தார்.

இலங்கைப் பல்கலைக் கழக பேராசியர் டாக்டர் சேனரத் பரணவித்தான உள்பட பலர் அரசர்களின் பொருள்கள வெளிநாட்டுப் பிரயாணிகளாலும் ஏனையோராலும் அதிகம் கைபோடப்பட்டுப் பார்வையிடப்படுவதால் பழுதடைகின்றன எனக் கூறியுள்ளார்கள்.

மாலிகவாவிலுள்ள புராதன ஓவியங்களும் பழுதடைந்து போகாதவண்ணம் பாதுகாக்கப்படவேண்டும் என திரு சேனநாயக்கா ஆலோசனை கூறியுள்ளார்.

## வளர்மதிக்கு வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

கருகம்பானை வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பழை யுனைட்டட் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற முதலாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் வளர்மதி விளையாட்டுக்கழகம் 7 கோல்களால் வெற்றியீட்டியது.

மேற்படி இரண்டு கழகங்களினதும் இரண்டாம் பிரிவுக் கோஷ்டியினர் கலந்துகொண்ட மற்றுமோர் உதைபந்தாட்டப் போட்டியில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 4 கோல்களால் வெற்றியீட்டியது.

இரு போட்டிகளுக்கும் திரு. பாக்கியநாதர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சாரணர் 'ஜம்போரி' அடுத்த வருடம் இங்கு நடைபெறும்

மாத்தளை, திங்கள்

அடுத்த வருடம் பெப்ரவரி 26-ம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 3-ம் தேதிவரை கொழும்பிலுள்ள குதிரைப் பந்தயத் திடலில் சாரணர் ஜம்போரி நடைபெறும்.

இதில் 4000 க்கு மேற்பட்ட சாரணர் பங்கு பற்றுவர். ஆசியாவிலுள்ள பல நாட்டு சாரணர்களும் பங்கு பற்றுவர். இந்த இயக்கத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கமாக அடுத்த மாதம் 2-ம் தேதி மாத்தளை கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரியில் பொருள் விற்பனவு பண்டிகை நடத்தி அதில் வரும் வருமானத்தை அந்த சம்மேளனத்திற்கு அனுப்புவதென மாத்தளை மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு ஜே. என். டானியல் கூறினர்.

# தேசியஅபிவிருத்திவேலைக்கு இராணுவம் பயன்படுத்தப்படும்

### சட்டத்தைத் திருத்த மசோதா

கொழும்பு, திங்கள்

இலங்கை இராணுவத்தை தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயனபடுத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ரஸ்தாக்கள் போடுவது, பள்ளிக்கூடக் கட்டடங்கள், பாலங்கள் அமைப்பது, காடுகளை அழிப்பது, குடியேற்றத் திட்டங்கள், விவசாய அபிவிருத்தி இவ் வேலைகளில் அவர்கள் ஈடுபடுவார்கள்.

நாட்டிலுள்ள எல்லாச் சக்திகளையும் தேசியஅபிவிருத்திக்கு ஈடுபடுத்தவேண்டும் என்ற அரசாங்கக்கொள்கைக்கிணங்க இராணுவம், கடற்படை, விமானப்படை இவற்றைச் சேர்ந்தவர்களை இவ்வேலைகளுக்கு பயன்படுத்துவர்.

இதற்கான முறையில் இராணுவச் சட்டத்தைத் திருத்த ஒரு மசோதா பார்லிமெண்டில் சீக்கிரத்தில் கொண்டு வரப்படும்.

## வரி வசூலிப்பதில் இரு புதிய மாற்றங்கள்

கொழும்பு, திங்கள்

உள்நாட்டு வருமான வரி இலாகா தொழிற்படுவதை நிதிமந்திரிஆராய்ந்ததன்பேரில் இதுசம்பந்தமாக இரண்டு மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன. ஒன்று வரிகளைச் சேர்த்துக்கொள்ளும் முறைகளை மாற்றிக்கொள்வது. மற்றது திறமையான முறைகளைக் கையாள்வது.

நிதிமந்திரியின் ஆராய்ச்சியின்பேரில் வரி சேகரிப்பதில் சுலபமான முறைகளை இலாகா கையாளவிருக்கிறது என அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. இலாகாவில் குறைகளைக் காணும் நோக்கத்துடன் நிதி மந்திரி இலாகா தொழிற் படுவதை ஆராயவில்லை எனவும் வரி சேகரிக்கும் முறையில் இலாகாவுக்குள்ள கஷ்டங்களைப் பார்வையிடும் நோக்கத்துடனேயே அவர் ஆராய்ச்சி நடாத்தினர் எனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ரசாயன தொழிலாளர் தலைவரை கொலை செய்ய முயற்சி

பரந்தன், திங்கள்

பரந்தன் ரசாயன தொழிற்சாலை ஐக்கிய ரசாயன தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. என். ராமநாதன் என்பவரை இத்தொழிற்சாலையில் இயங்கி வரும் மற்ருெரு சங்க அங்கத்தவரால் சென்ற வெள்ளிக்கிழமை மாலை தொழிற்சாலை வாசலில் வைத்து கத்தியால் குத்தப்பட்டு கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குத்தியதாகச் சொல்லப்படும் இத்தொழிற்சாலைத் தொழிலாளி இன்னும் தலைமறைவாகத் திரிகிருர். கிளிநொச்சிப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகிருர்கள்.

திரு. ராமநாதன் கொழும்பில் நடைபெறும் இலங்கைத் தொழிலாளர் சங்க சம்மேளனத்தின் 15வது மகாநாட்டில் பங்குபற்றுவதற்காகப் புறப்படுகையில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

## கார் நிறுத்திய வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பபணம், திங்கள்

வாகனங்களை நிறுத்தக் கூடாத இடத்தில் தமது காரை நிறுததியதாக கொழும்பு வழக்கறிஞரும் தற்போது வட்டுக்கோட்டையில் தங்கியிருப்பவருமாகிய திரு. ஏ.தேவராஜா என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரி தாம் குற்றவாளியென ஒப்புக்கொண்ட தன்பேரில் மாஜிஸ்டிரேட் அவரை எச்சரிக்கை செய்து வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

உதவி இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ரணசிங்கா வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

## புத்தக விண்ணப்பப் பத்திரங்கள் சிங்களத்தில் மட்டும்தான்

மாத்தளை, திங்கள்

மாத்தளை நகர சபையார் நகர எல்லைக்குள் வாழும் வறுமையான மக்களின் பிள்ளைகளுக்கு இலவச புத்தகங்கள் வருடா வருடம் வழங்கி வந்தார்கள். அவ்வாறு வழங்கும் புத்தகங்களுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் ஆங்கிலத்திலேயே இருந்தன.

இவ்வருடம் டிசம்பரில் விநியோகிக்கப்படவிருக்கும் புத்தகங்களுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் சிங்களத்தில் இருக்கின்றன!

நகர சபை 9-ம் வட்டார அங்கத்தவர் திரு. என். எல். ரி. தீன் நகர சபைத் தலைவர் திரு. ரி. தம்பிராஜாவுக்கு அவ் விண்ணப்பப் பத்திரங்கள் மும்மொழியிலும் இருக்க வேண்டும் என இன்று ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.


## வைத்தீஸ்வர வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.

**1962ம் ஆண்டில் புதிதாக மாணவரைச் சேர்த்தல்**

கீழ்க்காணும் வகுப்புக்களுக்கு மாணவரைச் சேர்க்க விரும்புவோர் இம்மாதம் 29ந் திகதிக்கு (29-11-61) முன் விண்ணப்பம் செய்தல் வேண்டும். சேர்க்கக்கூடிய மாணவர் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வகுப்பு | சேர்க்கும் தொகை |
|---|---|
| பாலர் கீழ்ப்பிரிவு | 75 |
| நாலாம் வகுப்பு | 20 |
| ஐந்தாம் வகுப்பு | 10 |

ஆரும் வகுப்புக்கும் அதற்கு மேற்பட்ட மற்றைய வகுப்புக்களுக்கும் தெரிவுப் பரீட்சை நடத்தப்படும். அதன் விபரங்கள் பின் அறிவிக்கப்படும்.

வைத்தீஸ்வர வித்தியாலயம், 17—11—61

ச. அம்பிகைபாகன்
அதிபர்.

# டாக்டர் சாக்கோ சேவை நலன்

## மூளாயில் பாராட்டுக்கூட்டம்

வட்டுக்கோட்டை, திங்கள்

"டாக்டர் சாக்கோ இரவு பகல் எனப் பாராது மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைக்கே தன்னை அர்ப்பணித்திருந்தார். அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி அவருடைய சகாக்களும் பணியாற்றி வருகின்றனர்" இவ்வாறு முன்னாள் கல்வி உதவி மந்திரி திரு. க. கனகரத்தினம் மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் 18-ஆண்டுகள் கடமையாற்றிய டாக்டர் எம். ஓ. சாக்கோவுக்கு அளிக்கப் பெற்ற பிரிவுபசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். இக்கூட்டம் ஆஸ்பத்திரி முன்றலில் நடைபெற்றது. முதலியார் ப. மு. சங்கரப்பிள்ளை தலைமை வகித்தார். திரு. கனகரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

டாக்டர் சாக்கோவின் கெம்பீரமான தோற்றமும், நிமிர்ந்த நடையும் இந்த வைத்தியசாலையினுடைய பாதுகாப்புக்கு ஓர் அணிகலமாக விளங்கியது. சண்டியர்களுக்கு இங்கே இடமேயில்லை. தன்னுடன் பணியாற்றும் ஒவ்வொருவரையும் அவர் காப்பாற்றி வந்தார். நான் தலைவராய் இருந்த காலத்தில் நிர்வாக சபைக் கூட்டங்களில் அவர்களுக்காக வாதாடுவார். இங்கே வேலை செய்பவர்கள் பிழையான நடத்தையில் சிக்குண்டால், அவருடைய ஒழுங்குச் சட்டத்திற்கு மீறி நடந்தால், அவர்களை வைத்திய நிலையத்தின் நன்மையைக் கருதி வெளியேற்றிவிடுவார். ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் அவர்களுடைய தந்தையாகவே நடந்து கொள்வார். இவருடைய பிரிவு எமக்கு மிகுந்த வருத்தத்தை உண்டாக்குவதாகும். அமெரிக்க வைத்தியர்களான டாக்டர் கிறீன், டாக்டர் ஸ்கொட் ஆகியோரைப் போல் அவரும் பாரத நாட்டிலிருந்து வந்த ஒரு வைத்திய தூதுவரென்றே நாங்கள் கருதுகிறோம். இவ்வளவு காலமும் எங்கள் அனைவரையும் அனுசரித்து நடத்தியவர் தன்னுடைய சீவிய காலத்தில் ஒரு சிறு பகுதியையாகுதல் தன் பிள்ளைகளுடனும் சீவிக்க வேண்டுமென்ற காரணத்தினாலேயே நாங்கள் அவரை எங்களை விட்டுச் செல்லுமாறு அனுமதி கொடுக்கின்றோம். ஆனால் அவருடைய மகத்தான தோற்றமும், நினைவும் எங்கள் மத்தியில் என்றும் நிலவி எங்களுக்கு உற்சாகத்தை அளித்துக்கொண்டேயிருக்கும்."

டாக்டரின் சேவைநலத்தைப் பாராட்டி நியாயவாதிகள் திரு. ஏ. வி. குலசிங்கம், திரு. எஸ். ஆர். கனகநாயகம், டாக்டர் அமரசிங்கம், திரு. க. நல்லதம்பி, திரு. கே. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்சிகளும் ஏற்பாடாகியிருந்தன.

# மடங்கள் இடமாற்றத்துக்கு

## சங்கங்கள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கதிர்காம மடங்களை மாணிக்கக்கங்கைக்கு அப்பால் மாற்றும் யோசனையை ஆட்சேபித்து கட்டுவன் பாலர் ஞானோதய சங்கம் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளது

இத்தீர்மானத்தின் நகல்கள் ஸ்தலஸ்தாபன மந்திரி, நகர நிர்மாணப்பகுதி அதிபர், புத்தள கி. ச. தலைவர், காங்கேசன்துறை எம். பி. ஆகியோர்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

அத்தீர்மானத்தில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:—

பலநூற்றாண்டுகளின் முன்னதாக இலங்கை இந்துக்களால் ஸ்தாபிக்கப்பட்டு செவ்வனே நிருவகித்துவரும் புனிதமான மடங்களையும், இணைத்த கோவில்களையும், மாணிக்க கங்கைக்கு அப்பால் மாற்றவிருக்கும் அரசினரின் யோசனையை இச்சங்கம் வன்மையாக எதிர்க்கிறது. சுவாமி வீதிவலம் வரும்போது மடங்களில் நடந்துவரும் பூசைகளுக்கும், உபசரணைகளுக்கும் இச்செயல் தடையாக இருக்கும். சைவ மக்களின் பண்டுதொட்ட சுவாமி வழிபாட்டுக்கு தடைசெய்வதாகவும், ஜனநாயகத்திற்கு முரணானதாகவும் இருக்கும். மேற்படி மடங்கள் கோவிலின் அம்சங்களாக இந்துக்களால் கருதப்பட்டு வருகிறது. இம்மடங்களில் அறிவிற் சிறந்த ஞானிகள், பக்தர்கள் தங்கி சமய போதனைகள் செய்துவருகிறார்கள். தாய் நாடாகும் இந்தியாவிலே, கன்னியாகுமாரி தொடக்கம், இமயமலை ஈறாகவுள்ள பல சமயத்தவர்களின் கோவில்களிலும் மடங்கள் கோவில்களுக்கு அண்மையில் அமைக்கபபட்டிருப்பதைக் காணலாம். ஆகவே எக்காரணத்தை முன்னிட்டும் கதிர்காமத்திலுள்ள மடங்களை அப்புறப் டுத்த வேண்டாமென இச்சங்கம் இலங்கை அரசாங்கத்தைப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறது.

வட்டுக்கோட்டை, செவ்வாய்

கதிர்காமத்திலுள்ள மடங்களை அரசாங்கம் இடிப்பதற்கு முயன்றால் அது இந்துசமயத்தவரின் தெய்வநம்பிக்கையை அலட்சியப்படுத்துவதாகஇருக்கும் என்னும் தீர்மானம் இலங்கை சைவ சித்தாந்த திருப்பணிக் கழகத்தினரால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனைப் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைப்பதெனவும் பிரதிகளைச் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளை, திங்கள்

மாத்தளை சைவமகாசபையாரின் நிர்வாககூட்டம் மாத்தளை மகாத்மா காந்தி சபை மண்டபத்தில் திரு அ. விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் கதிர்காமத்தில் இருக்கும் மடங்களை அகற்றுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதை முன்னிட்டு பலத்த எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்ற முடிபு செய்தனர்.

கதிர்காமதலத்தைத் தரிசிப்பவர்களுக்கு பெரு உதவியாக இருக்கும் மடங்களை மாற்றுவது நியாயமற்ற செயல் எனவும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் இதையிட்டு உள்நாட்டு கலாச்சார அமைச்சருக்கு கடிதமூலம் அறிவிப்பதென முடிவுசெய்யப்பட்டது.

# போஸ்ட்மாஸ்டர்-எம். பி. சச்சரவு

## அமைச்சருக்கு யூனியன் முறையீடு

கொழும்பு, திங்கள்

மாத்தளைத் தபால்நிலையத்தில் கடமையாற்றிவரும் போஸ்ட்மாஸ்டருடன் மலைநாட்டுப் பகுதியைச் சேர்ந்த எம். பி. ஒருவர் நியாயமற்ற முறையில் நடந்துகொண்டார் என இலங்கைப் போஸ்ட்மாஸ்டர்கள் சங்கம் போக்குவரத்து மராமத்து அமைச்சருக்கு முறையிட்டுள்ளது. அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில் போஸ்ட்மாஸ்டர்கள் சங்கக் காரியதரிசி கூறியுள்ளதாவது.

செப்டம்பர் 30-ம்திகதியன்று டெலிபோன் கட்டணத்தைச் செலுத்திக் கொள்வதற்கென மாததளைத் தபால் கந்தோருக்கு ஒருவர் சென்றிருந்தார். பல மாதகாலமாகக் குறித்த கட்டணத்தொகை செலுத்தப்படாது இருந்தது. குறிக்கப்பட்ட தொகை அவ்வளவும் செலுத்தப்பட்டால் அன்றித் போன் மேலும் உபயோகத்துக்குவழங்க முடியாதென்றும் சனிக்கிழமை 1 மணிக்கு முன்னர் பணம் செலுத்தப்பட் வேண்டும் என்றும் போஸ்ட் மாஸ்டர் அவருக்கு அறிவித்திருந்தார்.

மாலை 3-30 க்கு மலைநாட்டு எம். பி. ஒருவர் போஸ்ட் மாஸ்டர்கள் அறைக்குள் சென்று தன்னைத்தானே அறிமுகம் செய்துகொண்டார். போஸ்ட்மாஸ்டர் அவருடன் கைகுலுக்குவதற்கு எழுந்திருந்தபோது "நான் இங்கு உம்முடன் கைகுலுக்குவதற்கு வரவில்லை. என்ன துணிவுடன், எனது டெலிபோனை நீர் தள்ளுபடி செய்ய முடியும்?" என்று எம். பி கர்ச்சித்தார். "நீர் போஸட் மாஸடராக இருப்பதற்கே தகுதியற்றவர். உமக்கு நான் ஒரு பாடம் படிப்பித்து வைக்கிறேன்" என்றும் பயமுறுத்தினர் அந்த எம். பி. இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு தாம் எம். பி. க்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமா என்று போஸட் மாஸடர் கேட்டுக்கொண்டார்,

போன் கட்டணச் செலவு செலுத்த வேண்டிய காலஎல்லை கழிந்துவிட்டபோதிலும் போஸ்ட்மாஸடர் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டார். கடடணம் செலுத்திய பின்னரும் அந்த எம். பி. போஸட் மாஸடருடன் கடுமையாக நடந்து கொண்டார்.

எம். பி. கடுமையாக நடந்து கொண்டதையும் பொருட்படுத்தாது தயவுசெய்து வெளியில் போகுமாறு போஸட்மாஸடர் எம். பி. யைக் கேட்டுக்கொண்டார். ஆனால் அச்சமயம் கூறத்தகாத வார்த்தைகளைப் போஸட்மாஸடருக்கு எம். பி. கூறினாம் கடைசியில் இந்த இடத்தை விட்டு அகன்று விடுங்கள் என்று கூறி எம். பி.யை வலோற்காரமாகப் போஸட்மாஸடர் துரத்தவேண்டி நேரிட்டது. குறிக்கப்பட்ட எம். பி. யின் செயல் குற்றம் நிறைந்ததுமட்டுமல்லாமல் அவமானமுடையதுமாகும்" போக்குவரத்து அமைச்சர் குறித்த சம்பவம் பற்றித் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் போஸட் மாஸடர்கள் சங்கம் வேண்டியுள்ளது,

# உலக கிறீஸ்தவ மகாநாடு: 60 நாடுகள் கலந்துள்ளன

புதுடில்லி, நவ. 20

அகில உலக கிறிஸ்தவ ஆலயங்கள் சபை புதுடில்லியில் ஒரு மகாநாடு கூட்டியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இம் மகாநாட்டில் 60 நாடுகளிலுள்ள சுமார் 35 கோடி கிறிஸ்தவ மக்களின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இம்மகாநாடு மூன்று வாரங்கள்வரை நீடிக்கும் எனத் தெரிகிறது. சுமார் 2000 பேர் கலந்து கொள்ளும் இம் மகாநாட்டில் பெருந்தொகையானவிருந்தினரும்கலந்துகொள்கின்றனர்.

ரஷ்ய வைதீய கிறிஸ்தவ கோவில்களின் தூதுகோஷ்டியொன்று மகாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என உலக கிறிஸ்தவ சபை பெரிதும் விரும்புவதாகத் தெரிகிறது. ரஷ்ய உலக கிறிஸ்தவ சபை அங்கத்துவத்துக்கு விண்ணப்பித்திருந்ததாகவும், 15 வருட கால முயற்சியின் பின்னர் உலக கிறிஸ்தவ சபையுடன் கலந்து கொண்டுள்ளதாகவும் அறியக் கிடக்கின்றது. ரஷ்ய அங்கத்துவத்துக்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பேர் மோஸாவும் எதிர்ப்புக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ரஷ்யர் இச்சபையில் கலந்து கொண்டால் ருமேனியா, பல்கேரியா கிறிஸ்தவ கோவில்களும் கலந்து கொள்ளும் எனவும், எனவே கிறிஸதவ ஒற்றுமையை இது அதிகரிக்கும் எனவும் நம்பப்படுகிறது.

கிறிஸதவ சபையின் 13 வருட சரித்திரத்திலும் இம்முறையே முதல் தடவையாக ஆசியாவில் மகாநாடு கூட்டப்பட்டுள்ளது. கீழைத் தேசத்துப் புழைய சமயங்களுக்கும் கிறிஸதவ சமயத்துக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்படுவதற்கு இது வழிவகுக்கும் என அதிகாரிகள் நம்புகிறார்கள்.

உலகப் பிரச்சினைகள் அனைத்துக்கும் கிறிஸதவ அடிப்படையில் பரிகாரம் தேடக் கிறிஸதவ சபை விரும்புவதாக சபைத் தலைவர்கள் கூறியுள்ளார்கள்.

பழைய வைதீக ஆலயங்கள் அணுகுண்டுப் பரீட்சை குடும்பக் கட்டுப்பாடு முதலிய விஷயங்கள் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதைக் கண்டனம் செய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் கிறிஸதவ மார்க்கத்தை உலக ஒளியாகக் கொண்டு உலக மக்கள் அனைவரையுமே ஒரே மாதிரியாக கிறிஸதவ மதம் கருதுவதாக கிறிஸதவ சபையின் குறிக்கோள் அமைந்துள்ளது.

ரஷ்யா, பல்கேரியா, போலந்து, ருமேனியா ஆகிய இடங்களிலுள்ள பழைய கோவில்கள் உட்பட 23 கிறிஸதவ ஆலயங்கள் உலக கிறிஸதவ மகாநாட்டில் கலந்து கொள்கின்றன எனக் கிறிஸதவ சபை கூறியுள்ளது. ரஷ்ய ஆலயங்களை எதுவித ஆட்சேபனையுமின்றிக் கிறிஸதவ சபை தம்முள் சேர்த்துக் கொண்டுள்ளது எனவும் உலக சபைக் கமிட்டி அங்கத்தவர் ஒருவர் கூறியுள்ளார்.

# கொழும்பில் இவ்வருடம் அதிக மழை

கொழும்பு, திங்கள்

வேறெந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் கொழும்பில் அதிக மழை பெயதுள்ளதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கின்றது. கடந்த 54 வருடகாலத்திலும் இவ்வருடம் பெய்ததுபோல் கொழும்பில் மழை பெய்யவில்லை எனத் தெரிகிறது. இதற்கு முன்னர் கடந்த 54 வருடத்திலும், 1953ம் ஆண்டிலேயே அதிகமான மழை பெய்தது. (128.55 அங்குலம்) ஆனால் இவ்வாண்டு ஏற்கெனவே இதற்கு அதிகமான மழை கொழும்பில் பெய்துள்ளது.

மார்ச், ஏப்ரல், ஆகஸ்ட், செப்டெம்பர், அக்டோபர் மாதங்களிலேயே மிகுதியாக மழை பெய்திருக்கின்றது. இவ்வருடம் முடியுமுன்னர் 5-10 அங்குலம் மழை கொழும்பில் பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பின் வருடாந்த சராசரி மழை, 93·21 அங்குலமேயாகும்.

# விளக்கு அணைந்திருந்தது ஆனால் உருவம் ஒன்று அசைவதை அவதானித்தேன்

## வழலாய்த் திருட்டு வழக்கில் பெண் சாட்சியம்

தெல்லிப்பழை, செவ்வாய்

வழலாய் வாசியானசின்னத்தம்பி திருநாவுக்கரசு என்பவரின் வீட்டிலிருந்து கடந்த அக்டோபர் மாதம் 5-ம் திகதி ரூ- 399 பெறுமதியானபொருள்களும் பணமும் திருடியதாகவும், திருடப்பட்ட ஓர் இரும்புப் பெட்டியை வைத்திருந்ததாகவும் காங்கேசன்துறை பொலிசார், அச்சுவேலியைச் சேர்ந்த இராமமூர்த்தி அழகையா என்பவர்மீது குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு வெஸலி டி தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

திருநாவுக்கரசுவின் மனைவி அன்னலட்சுமி தனது வாக்குமூலத்தில் கூறியதாவது:- சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு நானும் எனது பிள்ளைகளும் வீட்டு அறைக்குள் படுத்திருந்தோம். பின் ஜாமத்தில் விறாந்தையில் வந்து படுத்தேன். அறையிலிருந்து விறாந்தைக்கு வந்தபோது அறைக்கதவைப் பலமாகக் கட்டிவிட்டேன். விளக்கு எரிந்துகொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் ஒருவரின் காலடிச் சத்தம் கேட்டுத் திடீரென விழித்தேன். விளக்கு அணைந்திருந்தது. ஆனால் உருவம் ஒன்று அசைவதைக் கண்டு அவதானித்தேன். உடனே நான் சத்தமிட்டு விளக்கை ஏற்றிக்கொண்டு வீட்டிற்குள் சென்றேன். அங்குள்ள இரும்புப் பெட்டியிலிருந்து பொருள்களும் பணமும் காணப்படவில்லை. எனது சத்தத்தைக் கேட்டு 35 யார் தொலைவில் உள்ள வாசிகசாலையில் படுத்திருந்த எனது கணவர் வீட்டுக்கு வந்தார். அவரிடம் திருடப்பட்ட விவரத்தைக் கூறினேன். அவர் பொலிசாரிடம் புகார் செய்தார்.

எதிரி தான் சுறறவாளியென்று கூறவே வழக்குவிசாரணையை நீதிபதி டிசம்பர் 29 ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

காங்கேசன் துறைப்பொலிஸ இன்ஸபெக்டர் திரு கே துரைசிங்கத்தின் உதவியுடன் திரு என். தம்பிரத்தினம் வழக்கை நடத்தினர். திரு ஆர் ஜே செல்வரத்தினம் எதிரி தரப்பில் ஆஜரானர்.

---

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகரசபை தொடர்ந்த வழக்குகளால் சுமார் 80,000 ரூபாவை இந்தக் கோர்ட் மூலம் வசூலித்துள்ளது' என யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் சுகாதார இன்ஸபெக்டர் திரு பாக்கியராஜாவிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வீதிகள் மிகவும் மோசமான நிலையிலிருப்பதாகவும் இவற்றை சீர்படுத்துமாறு மேயரிடம் எடுத்துக் கூறுமாறும் மாஜிஸ்டிரேட் திரு பாக்கியராசாவிடம் கூறினர்.

### மணி வாக்கு

"வெறுப்பு வெறுப்பினலே அழிவதில்லை, அன்பினலேதான் அழியும். இது உலக நியதி."


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ 7உ (22-11-61

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பிரிட்டனில் குடியேற்ற கட்டுப்பாடு

குடியேற்றக் கட்டுப்பாடு மசோதாவை பிரிட்டனிலே "டைம்ஸ்" பத்திரிகையும், கன்ஸர் வெட்டிவ் கட்சியில் சிலரும் கூட பலமாக எதிர்த்தனர். இதைமுன்னிட்டு, இம்மசோதா பற்றிப்புனராலோசனை செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் சம்மதித்திருப்பது வரவேற்கத்தக்கது. என்ருலும் இதன் அடிப்படைக் கொள்கை, வெள்ளையரல்லாதாரையே பாதிப்பதால் இம்மசோதாவை வாபஸ் பெறுவதே உத்தமமாகும்.

மசோதாவைப்பற்றி உள்நாட்டு மந்திரி திரு. ஆர். ஏ. பட்லர் பேசுகையில், ஐரிஷ்குடி அரசைச்சேர்ந்த மக்கள் பிரிட்டனுக்கு வந்து குடியேறுவதை இம்மசோதா கட்டுப்படுத்காதென்ருர். அனுபவகாரணங்களால் இது முடியாதிருப்பதாகவும் அறிவித்தார். ஐரிஷ் குடி அரசு, காமென்வெல்த் குடும்பத்துக்குள் இல்லை. உணமையில் அது ஓர் அந்நிய நாடு. அந்நிய நாட்டவர்களை பிரிட்டனில் தாராளமாகத் தடையின்றி வர அனுமதித்துவிட்டு, காமன்வெல்த் குடும்பத்தைச் சேர்ந்த இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் இவ்விடங்களிலிருந்து வருபவர்களுக்குக் கட்டுப்பாடு தடைவிதிப்பது வர்ண வேற்றுமை காட்டுவதாகுமென்றும், காமன்வெல்த் குடும்பத்தை இது சிதைத்துவிடுமென்றும் பார்லிமெண்டில் சரியாக எச்சரிக்கை செய்யப்பட்டது.

மேலும் ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் பிரிட்டன் சேரத் தீர்மானித்துவிட்டதால், அந்த ஒப்பந்தப்படி, அந்நியர்களான மற்ற ஒப்பந்த நாடுகளைச் சேர்ந்தவர்களைத் தடையின்றி, பிரிட்டனில் குடியேற அனுமதிக்க பிரிட்டன் தயாராக இருக்கவேண்டுமாம். அவ்விதம் புதிதாக வரக்கூடிய ஐரோப்பியருக்கு இடமளிப்பதற்காக முன்கூட்டியே காம்ன்வெல்த் மக்களுக்குத்தடை கட்டுப்பாடு செய்யவே இம்மசோதா கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இது உண்மையாயின், காமன்வெல்த் குடும்பம் பெரிதும் சிதைந்துவிடுமென்பதில் ஐயமில்லை.

காமன்வெல்த் குடும்பத்துக்குத் தலைமை வகிக்கும் பிரிட்டன், தன் சுயநலத்தைமட்டும் கருதி, காமன்வெல்த் மக்களுக்கு பாதகம் செய்யக்கூடிய தடைகளை விதிக்கப்போகின்றதா? அப்படிச்செய்வதாயின், மற்ற காமன்வெல்த் நாடுகளின் நம்பிக்கையை பிரிட்டன் இழந்து, காமன்வெல்த் குடும்பத்துக்கே அது குழிதோண்டுவதாக இருக்கும்.

பொருளாதாரத்தில் குறைந்த இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியதீவுகள் முதலிய நாடுகளிலிருந்து, பிரிட்டனுக்கு மக்கள் குடியேறச்செல்லுவதின் காரணமென்ன? பிரிட்டனுக்குச் சென்ருல் ஏதாவது வேலை கிடைக்கும்; அப்படிக்கிடைக்காவிடினும் வேலையற்ருேர் இன்ஷியூரன்ஸ் உதவிப்பணம் கிடைக்குமென்ற நம்பிக்கையாலேதான். இந்தியா முதலிய நாடுகள் பிரிட்டனின் அரசியல் ஆதிக்கத்தில் சுமார் மூன்றரை நூற்றாண்டு

காலம் இருந்துவந்துள்ளன. பிரிட்டனிலுள்ள சமூக உதவித் திட்டங்கள் போல், மற்ற காமன்வெல்த் நாடுகளிலும் பிரிட்டன் செய்திருப்பின், தங்கள் சொத்து நாட்டைவிட்டு பரதேசம் செல்லயாரும் விரும்பமாட்டார்கள்.

புதிதாகச் சுதந்திரமடைந்த இந்தியா முதலிய நாடுகள், வேலையற்ருேர் உதவிப்பணம் அளிக்கக் கூடியவகையில் செல்வம் படைக்கவில்லை. ஆகவே இந்நாடுகளுக்கு கூடுமான பொருளாதார உதவியை பிரிட்டன் அளித்து, தன்நாட்டு மக்களுக்குள்ள சமூக உதவித் திட்டங்கள் அவர்களுக்கும் கிடைக்கும்படி செய்தால், காமன்வெல்த் மக்களின் நன்றியை பிரிட்டன் பெறுவதாக இருப்பதுடன் இவ்வித குடியேற்றத்தடைச் சட்டங்கள் போடவேண்டிய அவசியமில்லாமலும் போகும்.

# ஆத்மசுதந்திரம் பாதுகாக்கப்படின் இலக்கியம் செழிப்புறும்

## எழுத்தாளர்களுக்கு டாக்டர் ராதா கிருஷ்ணன் அறிவுரை

**அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு பம்பாயில் நடைபெற்றது. பல்வேறு இலக்கிய ஸ்தாபனங்களின் சார்பிலும் பல்கலைக்கழகங்கள் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர். மகாநாட்டில் இந்திய உபஜனதிபதி ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு வெளியாகியுள்ளது.**

இலக்கியத்தைக் குறிக்கும் "சாகித்தியம்" என்ற இந்திய வார்த்தைக்கு "ஒன்று கலந்திருத்தல்" என்பதே பொருளாகும். எனவே எழுத்தாளர்களின் உண்மையான பணி ஒருங்கு கூடியிருக்கும் பண்பை வளர்ப்பதேயாகும்.

ரிக்வேத காலத்திலிருந்து, ரவீந்திரர் காலம்வரை இடைப்பட்டுள்ள மூவாயிரம் ஆண்டுகளில் உருவாகியுள்ள நமது மகத்தான இலக்கிய மரபு, நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் பணி ஒன்று உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு ரஸத்தை அதாவது கருணை ரஸத்தை நாம் வற்புறுத்த வேண்டுமென்பதே அது.

பிறர் கருத்துக்களை விபரித்துக்கொள்ள முயலும் மனப்பான்மையை வளர்க்கும் பண்பே, உன்னத இலக்கியங்கள் அனைத்தின் சிறப்பியல்பாகும். மனிதப் பண்பை வளர்த்து, அகந்தையை அடக்கி, அடக்க உணர்வை வளர்ப்பதே மாபெரும் இலக்கியங்களின் முயற்சியாயிருந்து வந்திருக்கிறது.

இலக்கியங்களிலும் கூட, துவேஷத்தையும், சினத்தையும் வளர்க்கக் கூடிய ஒரு சில படைப்புகள் இருக்கின்றனவெனில் அதற்குக் காரணம், எழுத்தாளர்களிலேயே கூட ஒரு சிலரிடம் வெறித்தனம் காணப்படுகிறது என்பதேயாகும். அவர்களும் மனித குலத்தின் ஒரு பகுதியினர்தானே?

ஆத்ம சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்படும் சூழ்நிலையில்தான் உண்மையான இலக்கியம் தோன்றி செழிக்க முடியும். தேசிய ரீதியில் புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுக்கும் ஒரு முயற்சியில் பங்கு கொண்டுள்ளவர்களாக எழுத்தாளர்களைப் பற்றிக் கருதுவதை அனுமதித்து விடக்கூடாது. இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தாவுக்கு உள்ளது போன்ற அந்தஸ்து அவர்களுக்கும் உண்டு. சரீரம், மனம், அறிவுத் திறன் போன்ற அழியக் கூடிய அம்சங்களையும் மீறி நிற்கும் தெய்வீக சகதியின் நுண் பொறியொன்று அவர்களிடம் பொதிந்து கிடக்கிறது.

உன்னதமான இலக்கியப் படைப்புகள், மனித கும்பவின் ஒரு அங்கமாக மாறிவிட்டுள்ள எழுத்தாளர்களால் படைக்கப்பட்டவையல்ல. அந்தந்த சகாப்தத்தின் சமூக நடை முறைகளையும், சூழ்நிலைகளையும் பிரதிபலித்துக் காட்டும் பிரதிபிம்ப உருவங்களாக மட்டும் இத்தகைய படைப்புகள் இருந்து விடுவதில்லை.

அதற்கு மாருக பிரத்தியட்ச உண்மைகளின் குறுகிய வரம்புகளை மீறி யெழுந்து, சமூக சீர்திருத்தத்தை விளைவிக்கக் கூடிய சக்தியாக விளங்கத் தக்கவர்களே மகத்தான இலக்கிய கர்த்தர்கள்.

மனிதன் குகைகளில் வாழ்ந்திருந்த அநாதிகாலந் தொட்டு இன்றுவரை மனிதகுல வளர்ச்சிக்குக் காரணமாய் விளங்கி வந்திருப்பது ஆன்ம சுதந்திரமேயாகும். ஸ்புட்னிக்குகளாலும்ராட்சஸஅணுக்குண்டுகளாலும் அதற்கு இப்போது ஆபத்துத் தோன்றியுள்ளது. இந்த நிலைமையில் ஒவ்வொரு எழுத்தாளரும் கிளர்ந்தெழுந்து, கண்ணியமாக, வாழ்க்கை நடத்த இன்னமும் சாத்தியக் கூறு இருக்கவே செய்கிறது என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

சில குறிப்பிட்ட மனித தர்மங்களின் பால் நம்பிக்கை வைத்து மனிதனின் இயற்கை சுபாவத்துக்கு மதிப்புத்தந்து, மனிதமாண்பை வளர்க்க எழுத்தாளர்கள் பாடுபட வேண்டும்.

## கைத்தொழிலுக்கு பண உதவி

யாழ்ப்பாணத்தில் இலங்கை வங்கியின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கையில் ஜெனரல் மனேஜர் திரு. வி. லோகநாதன் ஒரு நல்ல செய்தியை வெளியிட்டார். இங்கு கைத் தொழில், விவசாய அபிவிருத்திக்கும், புதிய வீடுகள் கட்டவும் கடன் உதவி அளிக்கும் • திட்டமொன்றை இலங்கை வங்கி ஆரம்பித்துள்ளதாயும், இது விரைவில் அறிவிக்கப்படுமென்றும் தெரிவித்தார். ரப்பர், தேயிலை, தெங்குப் பொருள் இவற்றையே நம்பியிராமல், கைத்தொழில், விவசாய அபிவிருத்தியில், இனி அதிக கவனம் செலுத்தவேண்டுமென்றும் இதற்காக நீண்டகால, மத்திய கால உதவித் திட்டத்தை வகுத்துள்ளதாகவும் குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது. புதிய கைத் தொழில்களை ஆரம்பிக்கவும்; விவசாயத்தை விருத்தி செய்யவும் இப்போது பலர் ஆவலுடனுள்ளனர். ஆனல் பணத்தட்டுப்பாடு காரணமாகவே இவற்றில் ஈடுபட முடியாதிருக்கின்றது. தேசிய அபிவிருத்திக்கான முறையில் பலவங்கிகள் பணம் உதவ முன்வருவது முக்கிய தேசிய சேவையாவதுடன், பலருக்கு வேலை கிடைக்கவும் நாடு சுபிட்சமடையவும் இதனல் வழிபிறக்கும்.

# இயந்திரங்களினல் இயங்கும் தும்புத் தொழிற்சாலை

— வி. இராமகிருஷ்ணன் —

பளையில் சென்றசனிக்கிழமை நிறுவப் பெற்றுள்ள தும்புத்தொழிற்சாலை முழுவதும் இயந்திரங்களாலேயே இயங்கிவருகின்றது.

மின்சாரவசதியில்லாத இடத்தில் எண்ணெய்என்ஜின் அமைத்து, மோட்டார்களுடன் தொடுத்துதும்பு தயாரிக்கும் பதினன்கு இயந்திரங்களுடன் இணைத்திருக்கின்ருர்கள். ஊறவைத்த மட்டைகளிலிருந்து கையால் தட்டி தும்பு தயாரிப்பதற்கும் இயந்திரங்களின் உதவியுடன் எடுப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நேரில் பார்த்தால் தான் நன்கு விளங்கும். துரிதம், ஒரேதரம், உழைப்புக் குறைவு, ஊதியம் அதிகம், இந்நலங்களெல்லாம் இயந்திர சாதனங்களைக்கொண்டு அடையலாம்.

இத்தொழிற்சாலையில் நான்கு ரக தும்புகள் தயாரிக்கப்படுகின்றன. இப்பொழுது இத்தும்புகள் கடற்கரை பிரதேச மக்களிடையே குடிசைக்கைத் தொழிலாகப் பரவியிருக்கும் கயிறுபின்னுதல் போன்றவைகளுக்குக் கொடுக்கப்படும்.

இம்முயற்சியில் ஐந்து இளைஞர்கள் பங்குகொண்டிருக்கின்ருர்கள். இவர்கள் மிகுந்த பிரசயாத்தில் தேவையான தலைச் சேர்த்திருக்கின்ருர்கள். ஒற்றுமையாக உழைக்கின்றனர். நாளடைவில் இங்கு பலவித தெங்கு, பனைப் பொருட்கள் செய்யப்படவேண்டிய அத்தியாவசியத்தை உணர்ந்து செயலாற்றுகின்ருர்கள்.

ஒரு யோசனை. இப்பொழுது இங்கு உற்பத்தியாகும் தும்புத் தூள் உரத்திற்காகவே பயன் படுத்தப்படுமாம். காலக்கிரமத்தில் இவற்றையும், மற்றும் தச்சுத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் மரத்தூள்களையும் சேர்த்து கடினமான மட்டைகள் (Hard-boards) செய்வதற்கு வேண்டிய வழிவகைகளை உடனடியாக ஆராய வேண்டும்.

இத்தும்புத் தொழிற்சாலை மிக உன்னதமான ஒரு முயற்சி. இத்தகைய முயற்சிகள் நம் பகுதிகளில் அமோகமாகப் பெருக வேண்டும் பொது மக்களின் ஆதரவு இவற்றுக்குத் தாராளமாகக் கிடைக்க வேண்டும்.

## ஐயாறன் எழுதுவது

கார்த்திகை தீபம் இன்ரு, நேற்ரு? என்று ஓர் அன்பர் கேட்கின்ருர். நேற்று பௌர்ணமி. வீடுகளிலும், சிவாலயங்களிலும் தீபத் திருவிழா. சொக்கப்பனையும் நேற்றுத்தான்.

இன்றுதான் கார்த்திகை நட்சத்திரம். விரதம். குமாராலயங்களிலும், பிள்ளை ஆலயங்களிலும் தீபம்.

* * *

'சொக்கப்பனை' அல்லது 'சொக்கப்பானை' என்ற பெயர் எப்படி வந்தது? "சுஷ்கப்பனை" என்பதுதான் இப்போது 'சொக்கப்பானை' என்று திரிந்துள்ளதாயும், சுஷ்கப்பனை என்ருல், காய்ந்த பனை ஓலை என்றும், அவைகளை அடுக்கி வைத்து, ஜோதிருபமாக இறைவனைக் காண்பதே இதன் கருத்தென்றும் ஓர் அன்பர் தெரிவிக்கின்ருர்.

உள்ளத்திலே தெய்வீக ஜோதியை எழுப்பி, பொய் ஆணவ இருட்டை ஒழிப்பதே தீபத்திருவிழாவின் உண்மை நோக்கமென்பர். தெய்வத் திருவருளே இதற்குத் துணை செய்ய வேண்டும். அப்படி அருள் பெற்ற பெரியோர்களுக்கு என்றென்றும் தீபத் திருவிழா தானே!

* * *

ஒரு ஈழத்துப் பெண்மணி. தமிழ்நாடு சென்று சர்வகலாசாலை பி. எஸ். ஸி. பரீட்சையில் ரஸாயன சரித்திரத்திலே முதல் வகுப்பில் தேறியிருக்கிருர். இங்கு ஆசிரியர் வேலைக்கு முயன்றதில் வெளி சர்வகலாசாலை பட்டம் பெற்றதால் இங்கு வேலை கிடைக்க முடியாதிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கை சர்வகலாசாலை பட்டதாரிகளிடையே வேலையில்லாக் கஷ்டம் அதிகரித்திருப்பது உண்மையே. ஆனல் வெளிநாடு சென்று அதிக பணச் செலவு செய்து விஞ்ஞானத்திலே முதல் வகுப்பில் தேறியவர்களை, அலட்சியம் செய்து ஒதுக்குவது சரியான கொள்கையாகாது.

ஒருவரது தகுதியைக் கண்டே ஆசிரியர் முதலில் வேலைகளை அளிக்க வேண்டும். இந்தியா சென்று முதல் வகுப்பில் தேறியவர்களை ஒதுக்கிவிட்டு, இங்கு மூன்ருந்தரமாக சித்திபெற்றவர்களுக்கா வேலை கொடுப்பதென்ற வேற்றுமை மனப்பான்மை நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்லதாகாது.

இங்கு சர்வகலாசாலை உயர்தரக் கல்வி கற்க, பலருக்கு இடமில்லை. அவர்களில் பலர் சொந்தச் செலவிலே வெளியே சென்று உயர்தரப் பட்டம் பெற்று திரும்பியுள்ளனர். அப்பட்டங்களை அரசாங்கம் அங்கீகரிக்கவே செய்துள்ளது. என்ருலும் அப்படித் திரும்பியுள்ள இலங்கையருக்கு, வேலை தர முடியாதென்று வேற்றுமைத் தடை போடுவது அவர்களுக்குச் செய்யும் அநீதியாகும்.

ஆனலும் இது பற்றி எவ்வளவு கதறினலும், எழுதினலும் இப்போது இந்த உத்தரவு மாறுமென்று தோன்றவில்லை. ஆகவே உயர்தரகல்வி பெற்றவர்கள் அரசாங்க சேவையை நம்பியிராமல், சொந்தத்தில் சுயமுயற்சியால், மக்களுக்குப் பயனுள்ள பணி செய்து தாங்களும் நன்மை பெற புதிய வழிகளைத் தேடுவதே நல்லதாகும்.

* * *

நாள் என் செயும் வினைதான்
என் செயும் எனை நாடிவந்த
கோள் என் செயும் கொடுங்
கூற்று என் செயும்
குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் காப்பும் எனக்கு முன்
னேவந்து தோன்றிடினே!
—கந்தர் அலங்காரம்

# இந்தியாவில் சீனுவின் புதிய ஆக்கிரமிப்பு

## லோக சபையில் நேரு தகவல்

### சீனுமீது குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 21

"இந்திய பிரதேசத்தில் நவ சீனு மேலும் புதிதாக ஆக்கிரமிப்புச் செய்துள்ளது என்று பிரதமர் நேரு நேற்று லோக சபையில் தெரிவித்தார்.

இந்திய பிரதேசத்தில் சீனு மேலும் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாகவும் இதுபற்றி சபை விவாதிக்க வேண்டுமென்றும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தவர் ஒருவர் நேற்று சபையில் அவசரப் பிரேரணை ஒன்று கொண்டுவந்தார்.

இது பாரதூரமான விஷயம் தானென்றும் இதுபற்றி அரசாங்கம் சபைக்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்றும் கூறிய சபாநாயகர் அவசரப் பிரேரணைக்கு அவசியமில்லையென்றும் இன்னும் மூன்று நான்கு தினங்களுக்குள் விவாதிக்க சந்தர்ப்பம் தருவதாகவும் தெரிவித்தார்.

சீன ஆக்கிரமிப்புப்பற்றி பிரதமர் நேரு குறிப்பிடுகையில் புதிதாக சீனு ஆக்கிரமிப்புச் செய்துள்ளது உண்மையென்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் சீனு தனது துருப்புக்களைக் குவித்துள்ளதுடன் புதிதாக கண்காணிப்பு நிலைகளையும் அமைத்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்தியாவும் அப்பகுதிகளில் புதிதாக கண்காணிப்பு நிலைகளை அமைத்துள்ளதாகத் தெரிவித்த பிரதமர் பாதுகாப்பின் நிமித்தம் அதன் விபரங்களை வெளியிட முடியாது என்று கூறினர்.

இதன்பின் இரண்டு வாரங்களுக்கு முன் சீன அ;சாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அனுப்பிய ஆட்சேபக் குறிப்பு சபையில் வெளியிடப்பட்டது.

#### பிரதேசத்திலிருந்து வாபஸாக வேண்டும்

அக்டோபர் 31-ந் திகதி சீன அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அனுப்பிய ஆட்சேபக் குறிப்பில் சென்ற வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து இவ்வருடம்வரை இந்தியப் பிரதேசத்தில் 11 தடவைகள் சீனு அத்துமீறிப் பிரவேசித்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் ராஜ்யத்தில் லடாக் பிரதேசத்தில் அக்சச்சின் வெளியில் ஏற்கனவே சீனு ஆக்கிரகித்துள்ள 12,000 சதுரமைல் பகுதியில் ஆறு தடவைகளும் உத்தர பிரதேசத்தில் திபெத்—இந்திய எல்லையில் மூன்று தடவையும், வடகிழக்கு எல்லையில் இரண்டு தடவையும் இச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளனவென்று அந்தக் குறிப்புத் தெரிவித்துள்ளது.

அக்சச்சின் வெளியில் தனது கோரிக்கையை சீனு மேலும் விஸ்தரிப்பதாகக் குற்றம் சாட்டும் அக்குறிப்பில் ரஸ்தாக்கள் மூலம் இணைக்கும் புதிய வெளிநிலைகளையும் சீனு அமைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனுவின் இப்புதிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இந்தியாவுக்கு எதிராக மேலும் ஆக்கிரமிப்புச் செய்கிறதென்ற குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்துவதாக இருப்பதுடன் சீனுவின் ஆட்சேபனைகள், அதன் புதிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மூடிமறைக்கச் செய்யும் ஒரு உபாயமாகவே இருக்கிறதென்றும் அந்தக் குறிப்புத் தெரிவிக்கிறது.

"இந்திய பிரதேசத்தில் மேலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதுடன் சீனத் துருப்புக்கள் சட்டவிரோதமாகப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்தியப் பிரதேசத்திலிருந்து அவைகளை வாபஸ் பெற வேண்டும்" என்று இந்திய அரசாங்கத்தின் குறிப்புத் தெரிவிக்கிறது.

இந்திய எல்லையில் சீனத் துருப்புக்களின் நடமாட்டம் அதிகரித்து வருவதாகவும் இந்திய பிரதேசத்தில் சீனத் துருப்புக்கள் மேலும் ஊடுருவல் செய்வதாகவும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து மேலும் உள்பகுதிக்கு சீனத் துருப்புகள் சாலை அமைத்து வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளதாகவும் இந்தியாவின் ;றிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சசீலக் கொள்கைக்கு முரணாக சீனு நடந்து கொள்கிறதென்றும் இந்தியா அக்குறிப்பில் குற்றம் சாட்டியுள்ளது.

---

## 16 மொழிகளில் தகவல்கள்தெரிவிக்கும் நூதன சாதனம்

ஹாம்பர்க், நவ 20

ஹாம்பர்க்கின் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் பிரயாணிகள் அவர்கள் எந்த இடத்திற்குப் போக வேண்டுமோ அந்த இடத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க ஒரு நூதனத் தகவல் அறிவிப்பு சாதனம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் பெயர் "ஜியோமெட்" என்பதாகும்.

இந்த சாதனம் பார்ப்பதற்கு ஒரு டெலிவிஷன் 'ஸெட்' போல இருக்கிறது. இதில் மூன்று திரைகள் உள்ளன. ஸ்விட்ஸ் போர்டில் மூன்று வரிசையில்பொத்தான்கள் உள்ளன. ஒரு வரிசையில் 'ஏ' முதல் 'எச்' வரை ஆங்கில அரிச்சுவடி எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மற்ரெரு வரிசையில் 1 முதல் 10 வரை எண்கள் எழுதபபட்டுள்ளன. முன்ருவது வரிசையில் 16 நாடுகளின் கொடிகளின் உருவங்கள் பொத்தான்களின் மீது காணப்படுகிறது.

ஜெர்மன் மொழியே தெரியாத ஒரு ஜப்பானியப் பிரயாணி இந்த விமானநிலையத்தில் இறங்குகிருர் என்று வைத்துக்கொள்வோம். அவர் ஹாம்பர்க் நகரில் ஒரு விலாசத்திற்குப் போகவேண்டுமானுல் அவர் ஜப்பானியக்கொடியுள்ள பொத்தானை முதலில் அழுத்த வேண்டும். நடுவிலுள்ள திரையில் ஜப்பான் மொழியிலுள்ள எழுத்துக்கள் கொண்ட ஹாம்பர்க் படம் தெரியும். தெருவின் பெயரின் முதல் எழுத்துள்ள பொத்தானை பின்னர் அழுத்த வேண்டும். இவர் போய்ச் சேர வேண்டிய இடத்தின் படம் அவர் போவதற்கு காட்டும் வழிகள் இவை வேறு திரைகளில் தெரியும்.

இந்த தகவல்அறிவிப்பு சாதனத்தை உல்லாசப் பிராயாணிகளுக்கு தகவல் தெரிவிக்கவும், போக்குவரத்து விபரம் பெறவும், மற்றும் பல காரியங்களுக்கும் இனி உபயோகிக்கப்படும்.

---

## அல்ஜீரிய தலைவர்களின் உண்ணுவிரதம்

### வாக்குறுதியின் மீது கைவிடப்பட்டது

பாரிஸ், நவ. 21

பிரெஞ்சு சிறையில் உண்ணுவிரதமிருந்து வந்த அல்ஜீரிய தேசிய இயக்கத் தலைவர் முகம்மது பென்பெல்லாவும் மற்றும் நால்வரும் நேற்று தங்கள் உண்ணுவிரதத்தை நிறுத்திக் கொண்டனர்.

பிரான்சில் சிறைவைக்கப்பட்டுள்ள அல்ஜீரிய தேசிய விடுதலை இயக்கத்தினர் சரியான முறையில் நடத்தப்படவில்லையென்றும் அவர்கள் அரசியல் கைதிகளாக நடத்தப்படவேண்டுமென்றும் கோரி இவர்கள் இம்மாதம் இரண்டாம் திகதி உண்ணு விரதம் ஆரம்பித்தனர்.

விடுதலை இயக்கக் கைதிகள் அரசியல் கைதிகளாக நடத்தப்படுவார்களென்று பிரெஞ்சு அதிகாரிகள் வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து இவர்கள் தங்கள் உண்ணு விரதத்தைக் கைவிட்டனர்.

பென்பெல்லாவின் உண்ணு விரதத்துக்கு அனுதாபம் தெரிவித்து உ.ண்ணு விரதம் இருந்த மற்றும் நாலாயிரம் கைதிகளும் தங்கள் உண்ணுவிரதத்தைக் கைவிட்டனர்.

---

## பட்டாச்சார்யா தண்டனை

### லோக சபையில் நேரு தகவல்

புதுடில்லி, நவ. 21

பாரத ராணுவ அதிகாரி கேணல் பட்டாசார்யாவுக்கு டாக்கா ராணுவ நீதி மன்றம் எட்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளதுபற்றி லோக சபையின் நேற்றைய கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் கேள்வி கேட்டனர்.

கேணல் பட்டாச்சார்யாவுக்கு அளிக்கப்பட்ட தண்டனை நியாயமானதல்லவென்றும் தீர்ப்பளித்த நீதிமன்றம் முறையானதல்லவென்றும் ஸ்ரீ நேரு சபையில் தெரிவித்தார்.

கேணல் பட்டாச்சார்யா சம்பந்தமாக ராஜீயத்துறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது என்று பிரதமர் தெரிவித்தார்.

---

## கூட்டுறவு இயக்கத்தின் அபாயகரமான நிலை

### விவசாய இயக்கத் தலைவர் எச்சரிக்கை

மட்டக்களப்பு, செவ்வாய்

'இப்பொழுது உள்ளது போல் முன்னர் ஒருபோதும் கூட்டுறவு இயக்கம் அபாயகரமான நிலையில் இருந்ததில்லை' என கிழக்கு மாகாண விவசாய கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் கூட்டுறவு இயக்கத்தினர் கலந்துகொண்ட கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்:

இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் பொன் விழாவைக் கொண்டாடுமுகமாக மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. தேவநாயகம் தொடர்ந்து பேசியதாவது:

"கூட்டுறவு இயக்கத்தைப் பயப்படுத்தும் முறையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது வருந்தத்தக்கது.

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்திலிருந்து கூட்டுறவு மறையத் தொடங்கியுள்ளது. அரசாங்க மொத்த விற்பனவு ஸ்தாபனம் என்று கூறுவதே இப்பொழுது பொருத்தமானதாக இருக்கும்.

கூட்டுறவு இயக்கம் இலங்கையில் செயல்படத் தொடங்கிய காலத்தில் தனிப்பட்டவர்கள் நடத்திவந்த வர்த்தகத்தோடு போட்டி போட்டு வந்தது. ஆனுல் இப்பொழுது அரசாங்கத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன சபையில் கூட்டுறவு சங்க சம்மேளனத்திலிருந்து அங்கம் வகிக்கும் மூன்று பிரதிநிதிகளையும் சபையிலிருந்து நீக்கி நூற்றுக்கு நூறுவீதம் அரசாங்கமயமாக்கத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கூட்டுறவு அம்சத்தை இழந்து அரசாங்க இயக்கமாகமாறி கூட்டுறவு சங்கங்களுடனேயே போட்டி போட ஆரம்பித்துள்ளது. இந்த நிலை கூட்டுறவு இயக்கத்தையே பாழடித்துவிடும்,

மக்கள் வங்கி கூட்டுறவு வங்கிகளுக்கு இடையூறுவிளைப்பதாக இருக்கிறது. காரணம் மக்கள் வங்கியில் கூட்டுறவு சம்பந்தமான நோக்கம் இல்லாததே.

---

## கல்வியின் நோக்கம்

### வித்தியாதரிசி விளக்கம்

வவனியா, திங்கள்

"கல்வியின் உண்மையான நோக்கம் ஒரு பிள்ளை தன் பிற்கால வாழ்க்கையை செவ்வனே நடாத்த வழிவகுத்தலேயாகும். எனவே ஆசிரியர்களின் பணி மிகவும் புனிதமானதொன்ருகும்" இவ்வாறு வவனியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விடுமுறைக் கழகத்தில் பேசிய வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். சபாபதி தமது உரையிற் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது;-

"மாணவர்களின் வயது, விவேகம், விருப்பு, கவர்ச்சி என்பனவற்றை அறிந்து அவற்றிற்கேற்ப ஆசிரியர்கள்கல்வியூட்டவேண்டும். இன்றைய புதிய முறைப்படி மாணவனுக்கு நேர் அனுபவத்தைக் கொடுக்கக்கூடியதாக முயற்சி மூலம் பாடங்களைப் படிப்பிக்க வேண்டும்.

இக்கழகத்தில் மாதிரிப் பாடம் ஒன்று சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியை செல்வி மு. கமலாதேவியினுல் புதிய முறைப்படி படிப்பித்துக் காண்பிக்கப்பட்டது.

---

## 4எம்.பி.க்கள் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மீதும் தமிழரசுக்கட்சியின் பிரபல அங்கத்தவரான புரக்டர் திரு. எஸ். நடராசா மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இன்று காலை நீதிபதி திரு. அரசுவால்டன் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதும் பிராசிக்கியூஷன் தரப்பில் யார் ஆஜராகிருர்? என்று நீதிபதி கேட்டார்.

பிராசிக்கியூஷன் தரப்பில் தாம் ஆஜராவதாக உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. வை. டி. சேனரத் தெரிவித்தார்.

எதிரிகள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நீதிபதி எதிரிகளுக்கு வாசித்துக் காட்டினுர்.

எதிரிகள் மௌனமாக இருந்தனர்.

"உங்கள் சார்பில் வழக்கறிஞர் எவராவது ஆஜராகிருர்களா?" என்று நீதிபதி எதிரிகளைப் பார்த்துக்கேட்டார்.

எதிரிகள் பதிலளிக்கவில்லை.

"நீங்கள் சுற்றவாளிகள் என்ற முறையில் நான் விசாரணையை ஆரம்பிக்கிறேன்" என்று நீதிபதி கூறினுர்.

குற்றப்பத்திரிகையில் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரிண்டென் திரு. ஆர்ண்ட் என்று குறிப்பிடாமல் திரு. சி. ஆர். ஆர்ண்ட் என்று எதற்காகக் குறிப்பிடப் பட்டிருக்கிறதென்பதை தாம் அறியவிரும்புவதாக நீதிபதி கேட்டார்.

குற்றப்பத்திரிகை அட்டர்ணி ஜெனரல் இலாகாவினுல் தயாரிக்கப்பட்டதென்று உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. சேனரத் தெரிவித்தார்.

"விசாரணையை இன்றே தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறீர்களா?" என்று திரு. சேனரத்திடம் நீதிபதி கேட்டார்.

திரு. சேனரத்:- இல்லை ஐயா! வழக்கை நடாத்த முடிக்குரிய வழக்கறிஞர் இங்கு வருவார்.

நீதிபதி: (எதிரிகளைப் பார்த்து)வழக்கு விசாரணையை நடத்தத்தயாராக இருக்கிறீர்களா அல்லது விசாரணையை மற்ரெரு தினத்துக்கு வைக்க விரும்புகிறீர்களா?

எதிரிகள் மௌனமாக நின்றனர்.

நீதிபதி வழக்கு விசாரணையை 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். ——

## 'சாசன அறிக்கையை செயல் படுத்துக'

### பிக்கு வேண்டுகோள்

கடுகண்ணுவை, செவ்வாய்

'சானக் கமிஷன் அறிக்கை திருத்தப்படக்கூடாது. இந்த அறிக்கை செயல்படுத்தப்பட வேண்டும்' என சாசனேதய பிரிவெனுவின் அதிபர் பண்டிதயட்டினுவரா இந்தராதன, உடுனுவரா தொகுதியில் தொட்டதேனியா ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: இவ்வித அறிக்கை செயல்படுவதால் சங்கத்திலிருக்க அருகதையற்றவர்சள் வெளியேற்றப்படுவார்கள்.

இந்த அறிக்கை பிக்குகளின் மீது வஞ்சம் தீர்ப்பதற்காகப் பாவிக்கப்படும் அரசியல் ஆயுதமாக மாற்றக்கூடாது.

---

## அக்கரைப்பற்றுப் பகுதியில் பெரும் மழை

அக்கரைப்பற்று, செவ்

சென்ற ஒரு வாரமாக அக்கரைப்பற்றுப் பகுதியில் பெரும்மழை பெய்து கொண்டு வருகிறது. சமீபத்தில் விதைக்கப்பட்ட நெல்வயல்களில் எல்லாம் வெள்ளம் தேங்கி நிற்கிறது. அறுவடை நடைபெற்ற வயல் நிலங்கள் மழையால் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது.

---


### வீடு வாடகைக்கு

திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரிக்குப் பக்கத்தில் இந்துமகளிர் கல்லூரிக்கு அருகாமையில் குமாரசாமி வீதியில் 3-ம் நம்பர் வீடு வாடகைக்கு இருக்கின்றது. விபரங்கட்கு: க. கதிர்காமலிங்கம், 40, சிவன் பண்ணைவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

# ‘கோரிக்கை நியாயமெனில் நிறைவேற்றத் தயங்கேன்’

## —கல்வி மந்திரி

கேகாலே, திங்கள்

‘ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை அளிப்பது பற்றி தீர்மானிப்பது மந்திரி சபையைப் பொறுத்த விஷயம். தனிப்பட்ட முறையில் நான் இவ்விதம் உரிமை அளிப்பதற்கு மாருக இல்லை. ஆனல் மந்திரி சபையின் தீர்மானத்தின் படியே நான் நடந்துகொள்ள வேண்டும்’.

இவ்வாறு கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் கேகாலை வித்தியாலயத்தில் நடைபெற்ற ஜாதிக சேவா ராஜயி குரு சங்கமயாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மந்திரி மேலும் பேசியதாவது:

ஆசிரியர்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் இருப்பது எனது நோக்கமல்ல: ஆசிரியர்களின் கோரிக்கை நியாயமானதாக இருந்தால் அவற்றை ஆராய்ந்து நிறைவேற்றுவதில் நான் என்றும் அக்கறை கொண்டுள்ளேன். நான் கூட்டங்களில் பேசும்போது நிதானமாகவே நடந்து கொள்வேன். ஏனெனில் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கூற நான் விரும்புவதில்லை.

இலங்கையைப் போல் வேறெந்த ஆசிய நாடும் கல்விக்கு இவ்வளவு தொகையான பணம் செலவு செய்யவில்லை. இலங்கை ஒன்றுதான் இலவசக் கல்வி அளித்து வருகிறது என்று கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

இலங்கையில் சிங்களம் அரசகரும மொழியாக ஆக்கப்படவேண்டும் எனக் கோரியவர்களுள் நானும் ஒருவன். நான் ஆங்கில உடை தரித்திருந்தாலும் எனது எண்ணங்களெல்லாம் சிங்களத்துக்கே உரியது. உண்மையில் சிங்கள ஆசிரியர்கள் தாம் முன்பு கோரிவந்ததை இப்போது அனுபவித்து வருகிருர்கள்.

விசேஷ பதவிகளுக்கான காலிஸ்தானங்களை நிரப்புவதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் போது 50 சதவீதமானேர் சிங்கள ஆசிரியர்களாகவே இருக்கவேண்டுமென நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஒரு குறிப்பிட்ட பாடசாலையிலுள்ள ஆரம்ப வகுப்புகளில் சேர்ந்து கொள்ளப் பிள்ளைகள் விரும்பினல் அவர்கள் அதற்கான தகுந்த காரணங்களைக் காட்டுவார்களாயின் அவர்களை அப்பாடசாலையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். நெருக்கடி ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள இரு நேர வகுப்புகள் நடத்த வேண்டும்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதை விரும்பாத விரோதிகள் பலவிதமான கதைகளைப் பரப்புகின்றனர். இலங்கையில் கல்வி சம்பந்தமாகப் பெற்ற பல வருட அனுபவத்திஞல் எது செய்ய வேண்டுமெனக் கருதியிருந்தேஞே அதனையே செய்துள்ளேன் என்பதை இவர்களுக்கு நான் கூறவிரும்புகின்றேன்.

# ‘லீவு’ நீடிப்பதற்கு ஆயுள்வேதபத்திரங்கள்

கொழும்பு, திங்கள்

அரசாங்க சேவை ஊழியர்கள் தமது லீவுகளை நீடித்துக் கொள்வதற்கு ஆயுள் வேத வைத்தியர்களின் வைத்தியப் பத்திரங்களையும் சமர்ப்பிக்கலாமென அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இதுவரை அரசாங்கசேவையிலுள்ள டாக்டர்களின் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை ஒப்படைத்துக் கொண்டுதான் அரசாங்க சேவையாளர்கள் தற்காலிக லீவு பெற்றுக் கொள்ளமுடிந்தது. ஆயுள்வேத வைத்தியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற முன்னைய விதி மாற்றப்பட்டு இப்போது அவர்களின் பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும் எனச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின்படி ஆயுள் வேத வைத்தியர்கள் 14 நாட்களுக்கான வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கலாம்.

வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பற்றிய முந்திய சுற்றறிக்கைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனத் திறைசேரி அரசாங்க இலாகாக்கள் அனைத்துக்கும் அறிவித்துள்ளது.

அரசாங்க சேவையிலுள்ள டாக்டர்களின் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள்போலவே ஆயுள்வேத வைத்தியர்களின் பத்திரங்களும் மதிக்கப்பட வேண்டும் என அரசாங்க சேவையாளர்கள் அரசாங்கத்திடம் பலதடவைகள் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே மேற்படி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# கல்வி மந்திரியின் அநீதி

## முன்னுள் சொலிசிட்டர் கண்டனம்

காலி, திங்கள்

‘கல்வி மந்திரி செய்து வரும் அநீதிகளில் சாகிராக்கல்லூரியை எடுத்துக்கொண்டதும் நன்று. இதனல் அவர் முஸ்லிம் சமுகத்துக்கே துரோகம் விளைத்து விட்டார்.

இவ்வாறு முன்னுள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் ஜனப் ஏ. ஸி. எம். அமீர்கலுவெல ஜம்மு மகுதி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சாகிராக்கல்லூரியை மக்களிடம் திருப்பி ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் ஜனப் அமீர் மேலும் பேசியதாவது:

கல்விமந்திரி யு. என். பி.யை எதிர்ப்பதில் ஈடுபட்டுள்ளதால் இவ்வித ஆட்சேபமும் யு. என். பி. யினல் ஏற்படுத்தப்பட்ட சதித்திட்டம் என கூறி வருகிருர்.

நான் ஒரு அரசியல்வாதியல்ல. அரசியலில் சேரவும் நான் விரும்பவில்லை. ஜனப் பதியுதீன் ஓர் அரசியல்வாதியென ஒப்புக் கொள்ளப்பட்டால் அரசியல் வாதியாக நான் மாருதிருக்குமாறு இறைவன் என்னைக் காப்பாற்றுவராக!

கனம் மந்திரி தான் துட்டகைமுனு போன்ற ஒரு தேசிய வீரர் எனக் கூறிவருகிருர். இவ்விதம் கூறுவது துட்டகைமுனு மன்னனை அவமதிப்பதகும். ஒரு தேசியத் தலைவன், தான் தலைவன் எனத் தானே கூறிக் கொள்ளமாட்டான். மக்கள்தான் அவனை அவ்விதம் கணிக்க வேண்டும்.

எங்களது இந்தக் கோரிக்கை யு என் பியாலோ அல்லது வேறு அரசியல் கட்சியினராலோ தூண்டப்படவில்லை என்பதை பிரதம மந்திரிக்கும் அவரது மந்திரி சபையிலிருக்கும் மற்றைய மந்திரிகளுக்கும் உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

கல்வி மந்திரிதான் இவ்விதம் முஸ்லிம் சமுகத்தைப் பாதிக்குமாறு நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதை நாம் அறிவோம். இதுசம்பந்தமாக விசாரணை நடத்தவும் அவர்தான் மறுத்துவருகிருர் என்பதையும் நாம் உணர்வோம். அவர் விசாரணை நடத்துவதற்குத் தடையாக இராதிருப்பின் அவரது திகிடுதத்தங்கள் அம்பலப்படுதத எமக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

# ‘அரசாங்கத்துடன் ஒத்துழையுங்கள்’

## முஸ்லிம் மக்களுக்கு எம். பி. புத்திமதி

மதுகாமம், திங்கள்

“மக்களின் இருதயபூர்வமான ஒத்துழைப்பில்லாது பொருளாதாரத்தில் ஸ்திரமான ஒரு நிலையை ஏற்படுத்திவிட முடியாது. முஸ்லிம்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும்” என கொழும்பு மத்தியதொகுதி முதல் எம். பி. ஜனப் ராஸிக்பரீத் குறிப்பிட்டார்.

வியாங்கலையில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் புதிய அரசாங்க முஸ்லிம் பாடசாலையின் அடிக் கல்லை நாட்டிவைத்துப் பேசுகையிலேயே ஜனப் ராஸிக் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

தேச நலனைக் கருத்தில் கொண்டே முஸ்லிம்கள் தமது பிரச்சினைகளை அணுகவேண்டும். எல்லாச் சமுகத்தவரும் இலங்கை தமது நாடு என எண்ணக்கூடிய சூழ்நிலை இங்கு உருவாகவேண்டும்.

வியாங்கலை அரசினர் முஸ்லிம் பாடசாலையை மகாவித்தியாலயத்தின் நிலைக்கு உயர்த்துமாறு ஜனப் ராஸிக்பரீத் கல்வி இலாகாவைக் கேட்டுக் கொண்டார்.

### ‘ஒற்றுமையே உயர்வளிக்கும்’

கோப்பாய், திங்கள்

மக்களிடையே ஒற்றுமை ஏற்பட்டால் பொது நிலையங்களும் வலிமை பெற்று வருமென அம்மன் கோவிலடி சனசமுக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த நிலையத் தலைவர் திரு. த. சிவஞானம் தமது உரையிற் குறிப்பிட்டார்.

ஒற்றுமை வாழ்வுதான் எமது நாட்டையோ கிராமத்தையோ விருத்தியுறச் செய்யுமென வ—வடக்கு திரு. வ. கந்தப்பிள்ளை தமது பேச்சிற் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் விரோத மனப்பான்மையானது எந்த சமுகத்துக்கும் நன்மை விளைக்கப் போவதில்லையென்ருர்.

புது வருட உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்படடனர். தலைவர்: திரு. பொ, கந்தையா, உபதலைவர்: திரு. தீ. சுப்பிரமணியம், காரியதரிசி: திரு. த, சிவஞானம், உப காரியதரிசி திரு. வீ. எஸ். செல்வரத்தினம் தனதிகாரி: திரு. க. இலகுப்பிள்ளை. ஒன்பது பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பெற்றது.

### தேயிலை ரப்பர் வருமானம் குறைந்துள்ளது

கொழும்பு, திங்கள்

இந்தவருடம் ஆகஸ்ட்மாதத்தில் இலங்கையில் தேயிலை ரப்பர் ஆகியவற்றின் ஏற்றுமதி குறைந்துள்ளதாகத் தெரிகிறது. தேயிலை ஏற்றுமதி 31 லட்சம் ருத்தல் குறைந்துள்ளதாகவும், ரப்பர் ஏற்றுமதி 30 லட்சம் ருத்தல் குறைந்துள்ளதாகவும் தெரிகிறது. இவற்றின் ஏற்றுமதியால் ஜூலை மாதத்தில் 10 கோடி 76 லடசம் ரூபா வருமானம் கிடைத்தது. ஆகஸ்ட் மாதத்தில் வருமானததின் தொகை 10 கோடியே 30 லட்சம் மட்டுமேயாகும். தேயிலை ரப்பர் ஏற்றுமதியால் பெறப்பட்ட வருமானம் ஜூலை மாதத்திலும், ஆகஸ்ட் மாதத்தில் 46 லட்சம் குறைந்துள்ளது.

### கிராமமுன்னேற்றச் சங்கம்

நயினதீவு, திங்கள்

நயினதீவு தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் திரு. கா. ஆறுமுகம் தலைமையில் கணேசா சனசமுக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.


ஒருபோதும் கிடைக்காத மிகச் சிக்கனமான

பொஸ்

BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்



சமையல் அடுப்பு - 20U —2 பர்னர்கள்

சமையல் அடுப்பு - 27U —2 பர்னர்கள்

சமையல் அடுப்பு - 37U —3பர்னர்கள்

பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு CWE சி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட், வி.டப்ளியூ.ஈ. கடை, மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்.

E. W. 46

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 22-11-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸலாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை 8-00 புல்லாங்குழல், 8-15 இஸலாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்டும் வீணையும்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 பிறிம் ஜே. காசிநாதன்-பாட்டு, 8-00 முஸலிம்நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்சினை, 9-45 வி. சிவராசா பாட்டு.

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-10.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறுப்புகள், 7-30 தஞ்சாவூர் ஜி. ராமமூர்த்தி - வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'எல்லோரும் ஒரே இனம்' - சித்திரம், 7-45 'நெருப்பு' - சிறுகதை, 8-00 தஞ்சாவூர் ஜி. ராமமூர்த்தி - வீணை, 8-30 திரைப்படஇசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 சென்னை அஞ்சல்.

## விளையாடாமல் வெற்றி

மாவிட்டபுரம், செவ்.

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கும் மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே ரேயல் விளையாட்டுக் கழகச் சுற்றுப் போட்டி அமைப்பின் கீழ் நடைபெறவிருந்த கைப்பந்தாட்டப் போட்டிக்கு ஐக்கிய விளையாட்டுக் கழகம் வராமையால் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றி கொடுக்கப்பட்டது.

## பாடசாலைத் தெரிவுக்கோஷ்டி உதைபந்தாட்டம் சனிக்கிழமை நடைபெறும்

### சாம்பியன்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் முடிவடைந்துவிட்டன. இப்போட்டிகளில் சாம்பியனகளாக வெற்றியீட்டிய கோஷ்டிகளுக்கு வருகிற சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

### இறுதி விருந்து

நடைபெற்றுமுடிந்த சுற்றுப் போட்டியில் முதலாம் கோஷ்டி முதற்குழுவில் பங்குபற்றிய கோஷ்டிகளிலிருந்தும், இரண்டாம் குழுவில் பங்குபற்றிய கோஷ்டிகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட கோஷ்டிகளுக்கிடையே ஒருஉதைபந்தாட்டம் சனிக்கிழமை மாலை பொலிஸ மைதானத்தில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும்.

## புதிய சமுதாயத்தில் பெண்களின் பங்கு

கொழும்பு, திங்கள்

"இலங்கையில் அமைக்கப்பட்டுவரும் புதிய சமுதாயத்தில் பெண்களின் பங்கு மிக முக்கியம் உடையதாகும்."

இவ்வாறு பிரதமர் திருமதி பண்டாரநாயக்காபௌத்த மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில்பேசுகையில் கூறினர். திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

மோகனதாஸ் டி' மெல் தம்பதிகள் இந்தநாட்டில் பௌத்தகல்வியைப் பரப்புவதற்கு அதிகமாகஉழைத்தார்கள். பௌத்த மக்கள் அனைவரும் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாவர். பள்ளிக்கூடப் பிள்ளைகள் போயா தினங்களில் பள்ளிக்கூடத்திலேயே ஒரு சில மணித்தியாலங்களை ஆராதனையில் செலவிட வேண்டும் என உங்களது பள்ளிக்கூட அதிபர் கேட்டுள்ளார். இந்தப் புனித யோசனைக்கு வேண்டியது செய்ய நான் முயற்சிப்பேன்.

கல்லூரி அதிபர் திருமதி சுதர்மா பண்டிதா பேசுகையில் 1954-ல் ஆரம்பித்த தமது கல்லூரியில் இப்போது 60 ஆசிரியைகளும் 1,200 மாணவிகளும் இருப்பதாகக் கூறினர்.

## 'இல்லாமை'யால் கல்வியில் குழப்ப நிலை

—எம். பி.

குருநாகல், திங்கள்

"கல்வி நிலை இவ்வித குழப்பத்தில் இருக்குமானல் இலங்கை தனக்குத் தேவையான விஞ்ஞானிகளையும், டாக்டர்களையும், என்ஜினியர்களையும், தொழில் நுட்பவல்லுனர்களையும் என்ருவது உற்பத்தி செய்யுமா என்பது சந்தேகமே." இவ்வாறு குருநாகல் எம். பி. திரு. ஜெயபத்திரான மாளியதேவா மகளிர் பாடசாலையில் நடைபெற்ற பெற்ரேர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

இன்றுள்ள குறைந்த நிலைக் கல்வி பற்றிக் குறிப்பிட்டு அவர் மேலும் கூறியதாவது:

போதிய நிதி இல்லாமை, கல்வி பயிற்றுவிக்கத் தேவையான கட்டடங்கள் இல்லாமை, கல்வித் திட்டம் சம்பந்தமாக ஒரு நிரந்தரத் திட்டம் இல்லாமை தராதரம் பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை, நிர்வாகத்தில் பொறுப்பு இல்லாமை, ஆகிய இல்லாமைகளெல்லாம் சேர்ந்துதான் இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் தொகை அதிகரித்து வருவதும் இந்த குழப்ப நிலைக்கு ஒரு காரணம்.


# தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ

# உகந்தது ஜம்பிங் பிஷ்

## பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கனமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் இடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் இடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.





ஏக விநியோகஸ்தர்கள்:

சி. டப்ளியூ ஈ

கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ, ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ, தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது


## கலவன் பாடசாலைகளாக மாற்றும் திட்டத்துக்கு கம்பளையில் பெற்ரேர் ஆட்சேபம்

கண்டி, திங்கள்

கம்பளையிலுள்ள பாடசாலைகளைக் கலவன்பாடசாலைகளாக மாற்றி அமைப்பது எனக்கல்வி இலாகா சமீபத்தில் செய்துள்ள தீர்மானத்துக்கு இங்குள்ள பல பெற்ருர்கள் எதிர்ப்புகளை தெரிவித்துள்ளனர்.

கம்பளை சென் யோசெப் கொன்வன்டில் படித்துவரும் சுமார் 500மாணவிகளின் பெற்ரேர் நேற்றுப் பள்ளிக்கூடம் சென்று அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்தார்களெனத் தெரியகிறது.

பள்ளிக்கூட புனரமைப்புத் திட்டத்தின் கீழ் முஸ்லிம் பெண்களும் கலவன் பாடசாலை செல்ல வேண்டியவர்களாகியுள்ளனர். கல்விக்கமிஷன் ஒன்று ஆலோசனை கூறவிருந்தபோதும் கல்வி இலாகா இத்தகைய முறையில் நடந்துகொள்வது ஒரு கேலிக்கூத்தாகும் என கம்பளை நகரசபை அங்கத்தவர்களில் ஒருவரான திரு. டி. வி. எம். நூன் கூறியுள்ளார்.

பெற்ரேர்கள் பலரும்கூடி ஞாயிற்றுக்கிழமையன்று சென் ஜோசப் கொன்வண்டில்ஒரு கூட்டம் நடத்தியிருந்தார்கள். பலரும் பலவாருக கல்வி இலாகாவின் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்தார்கள். புதிய முறையின்படி, முஸ்லிம் மாணவிகள் கட்டாயமாக சாஹிராக் கல்லூரிக்குச் செல்லவேண்டுமெனத் தெரிகிறது. பெற்ரேர்கள் கூட்டத்தில், பள்ளிக்கூடம் திருத்தியமைக்கும் திட்டத்தை கைவிட்டு அதற்குப்பதில் புதிய திட்டமொன்றை உருவாக்கும்படி பிரதமரையும், கல்வியமைச்சரையும் கேட்டுக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. சென் ஜோசெப்கொன்வண்டில்' அதிபரை இடமாற்றஞ்செய்யாதிருக்கும்படி வித்தியாதிபதியை கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு திரு. என். டௌனேல் தலைமைவகித்தார்.

## பெரியார் இலட்சியங்களைப் பின்பற்றுமாறு புத்திமதி

### நாவலர் கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பெரியார்களின் ஞாபக தினத்தைக் கொண்டாடி பேச்சுப் போட்டிகள் நடாத்துவதுடன் மாத்திரம் நில்லாது அவர்கள் காட்டிய உன்னத இலட்சியங்களையும் பின்பற்றி நடந்து நமது சமூகத்தை முன்னேற்ற மடையச் செய்யவேண்டியதும் அவசியமமகும்,

இவ்வாறு வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடாத்தப்பட்ட நாவலர் பேச்சுப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை சமயப்பிரசார அமைச்சர் திரு மு. மயில்வாகனம் தமது குறிப்புரையிற் கூறினர் ஆசிரியர் வை. இராமகிருஷ்ணவும் பேசினர்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ரேர் விபரம் பின்வருமாறு:-

மேற்பிரிவு: (i) 1. சி. கந்தவேல், 2. நா. சிவபாதசுந்தரம், 3 தி. தியாகேஸ்வரி.

மேற்பிரிவு: (ii) ம. சூரியநாராயணன், 2. தி. கைலாயநாதன், 3. வை. கமலாசனி.

மத்தியபிரிவு: 1 வி. புண்ணியமூர்த்தி, 2 ரெ. மாரிச்சாமி, 3 ப. சுப்பிரமணியம்.

கீழ்ப்பிரிவு: (i) 1 சீ. சாவித்திரி, 2 சி, சின்னராசா, 3. ச. இரசேஸ்வரி.

கீழ்ப்பிரிவு: (ii) 1 க. சண்முகநாதன்.

ஆரம்பபிரிவு: (i) 1 ஆ உமாராணி. 2 க. தம்பையா, 3 ம. இரத்தினம்.

ஆரம்பபிரிவு (ii) 1 சு. இராமலிங்கம், 2 ச. நாகலிங்கம்.

எதிர்வரும் நாவலர் தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.

# புதிய கல்வி முறைக்கு கண்டனம்

## பாரதி கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்க தீர்மானம்

பதுளை, திங்கள்

"கிளையாட்சிகளின் மூலம் கல்வியை வலுப்பெறச்செய்வது என்ற முறையில் பள்ளிக்கூடங்களை பலவகையாகப் பாகுபாடு செய்திருப்பது எந்த நாட்டிலும் இல்லாத ஒரு முறையாகும். சர்வதேசக் கல்வி முறைக்கே முற்றிலும் முரணான இதனை மனித நீதிக்குப் புறம்பானதாகவே கருத வேண்டும்." என்று பதுளை பாரதி கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்கக் கூட்டத்தில் பேசும்போது தலைமையாசிரியர் திரு. க. இராமசாமி கூறுனர். அவர் மேலும் கூறியதாதாவது:-

"இரண்டு மைல்களுக்குள் உள்ள மாணவர்களை மட்டும் அனுமதிப்பதென்றால், பல மைல்களுக் கப்பால் இருந்து வரும் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகள் எப்படி அனுமதிபெற முடியும்? அதோடு இலங்கையர் 'இலங்கையர் அல்லாதார் எனவும் அனுமதிப்பதில் பாகுபாடு காட்டுவதால் பல ஆயிரக்கணக்கான தோட்ட மாணவர்கள் கல்லூரிகளில் அனுமதியின்றித் திருப்பிவிடப்படுவார்கள்.

கல்வி பிறப்புரிமை. இதனை அரசாங்கம் மறுப்பதாகாது. இப்போதைய முறையால் நிச்சயம் மலைநாட்டுமக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

"கல்வி இலாகாவின் மேற்கண்ட கட்டளைகளை எதிர்த்து ஆங்காக்கே உள்ள பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும், தனிப்பட்டவர்களும் கண்டனம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்ற தீர்மானத்தை திரு. வி. ஆறுமுகம் பிரேரித்தார். பிரேரணை நிறைவேறியது.

கூட்டத்திற்குப் பல தோட்டப் பொதுமக்களும் வந்திருந்தனர். செயலாளர் திரு. ஆறுமுகம் நன்றி தெரிவித்தார்.

## பொருட்காட்சியும் கதம்ப விழாவும்

முள்ளியவளை, செவ்வாய்

முள்ளியவளை கிழக்குக் கிராம முன்னேற்றச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும்நெசவு நிலையத்தில்நெய்யப்பட்ட கைத்தறித் துணிகள் காட்சிக்கு வைக்கப்பெற்றுள்ளன.

**கதம்பவிழா**

"முள்ளியவளைக் கி. மூ. ச பாடசாலை மண்டபத்தில், வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் கலைவிழா நடைபெற்றது.

# அரசாங்க ஊழியர் இடமாற்றம்

## சிங்களத் தேர்ச்சி; குமாஸ்தாக்கள் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

சிங்களத்தில் தேர்ச்சி பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டுமென்று அரசாங்கம் செய்துள்ள முடிவை நிறுத்திவைக்குமாறு அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச்சங்கம் நிதிமந்திரியைக் கேட்டுள்ளது.

அடுத்த வருடத்திலிருந்து சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற அரசாங்க ஊழியர்கள்வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டுமென்று சமீபத்தில் திறைசேரி ஒரு சுற்றுநிருபம் வெளியிட்டிருந்தது.

திறைசேரியின் இத்தீர்மானத்தினால் தங்கள் அங்கத்தவர்கள் பாதிக்கப்படுகிறார்களென்று குமாஸ்தாக்கள் யூனியன் மந்திரியிடம் தெரிவித்துள்ளது.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்தான் உபயோகிக்கப் படுகிறது. அங்கு ஆங்கிலத்தில் தான் அலுவல்கள் நடைபெறுகிறது. சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற ஊழியர்கள் அங்கு அனுப்பப்பட்டால் அவர்களுக்கு அநேகமாக வேலையே இருக்கமாட்டாது" என்று யூனியன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று பகுதியில் வெள்ளம்

## பல இடங்களில் போக்கு வரத்துத் துண்டிப்பு

அக்கரைப்பற்று, செவ்வாய்

அக்கரைப்பற்றுப் பகுதியில் சென்ற இரண்டு தினங்களாக இடிமின்னலுடன் பெரும் மழை பெய்து வருகிறது. அக்கரைப்பற்றுடன் தொடர்புள்ள சகல ரஸ்தாக்களிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. போக்குவரத்துக்கள் பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன. பயிர்கள் பல வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. சுமார் 10,000 ஏக்கர் நெல் வயல்களில் விதைப்புக் கைவிடப்பட்டு விட்டன. அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதான வீதியில் சின்ன முகத்துவாரம் போக முடியாதபடி வெள்ளத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது.

பொத்துவிலிலிருந்து சென்ற மோட்டார் வான் ஒன்று வெள்ளம் காரணமாகப் பாதையை விட்டு விலகி வெள்ளத்தில் அமிழ்ந்தது. இரண்டு டிராக்டர்களின் உதவியுடன் இந்த 'வான்' வெளியே எடுக்கப்பட்டது' வானில் பிரயாணம் செய்த எவரும் ஆபத்து இன்றி உயிர் தப்பினர்.

பெரிய முகத்துவாரம் ரஸ்தாவிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. 1957-ம் ஆண்டு வெள்ளத்தில் சேதமடைந்து பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட சிறிய வீதி இந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டது.

இப்பாதையில் பஸ் சேவை நிறுத்தப்பட்டு விட்டது. அக்கரைப்பற்று-இறக்ககாமம் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ளது. அக்கரைப்பற்று-கல்முனை ரஸ்தாவில் பஸ் சேவை தொடர்ந்து நடைபெறுகிறது.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய இடங்களில் தாழ்ந்த பகுதிகளில் வசித்து வந்தவர்கள் தங்கள் வீடுகளைக் காலி செய்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர். பாடசாலைகளில் பிள்ளைகளின் வரவு குறைந்துள்ளது. அரசாங்க காரியாலயங்களிலும் வேலைகள் மிகவும் குறைவாகவே நடைபெறுகின்றன.

# உள்நாட்டு அரிசிவிலை

## புசல் ஒன்றுக்கு ரூ. 13 அதிகம்

### அரிசி இறக்குமதி அதிகரிக்கிறது

கொழும்பு, செவ்வாய்

1958—59ம் வருடத்தில் உள்ளூர் அரிசியை, உத்தரவாத விலைத்திட்டத்தின்படி வாங்கியதன் பயனாக, ஒரு புசல் அரிசிக்கு, இறக்குமதி அரிசியை விட சராசரி ரூ. 12. சதம் 96 கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

உணவு உற்பத்தி, விநியோகக் கணக்கைப்பற்றி ஆடிட்டர் ஜெனரல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரத்தைக் கொடுத்திருக்கிறார்.

இறக்குமதி அரிசியின் சராசரி கொள்முதல் விலை ராத்தல் ஒன்றுக்கு 23 · 9 சதமாகிறது. (ஒரு கொத்து இரண்டு ராத்தலாவதால், ஒரு கொத்து அரிசி விலை 47 . 8 சதமாகிறது). அதாவது ஒரு புசல் ரூ. 15 · 29 ஆகிறது. உத்தரவாத விலைத்திட்டப்படி உள்நாட்டு அரிசி ஒரு ராத்தல் 44 · 13 சதம். (ஒரு கொத்து 88 · 26 சதம்) அதாவது ஒரு புசல் ரூ. 28 · 25 சதமாகிறது.

1658 - 59ல் வருஷத்தில் மொத்தம் 559663 டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டன. சென்ற வருடத்தில் 544844 டன்கள் இறக்குமதியாயிற்றென்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில்கூட்டுறவு பயிற்சி வகுப்பு

மன்னார், திங்கள்

மன்னார்ப் பகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று நேற்று மன்னார்ப் பகுதி கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எம். அலக்சாந்தர் தலைமையில் ஆரம்பமாயிற்று.

திருவாளர்கள் எம். சின்னத்தம்பி, வி. மயில்வாகனம் ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

## கதிர்காம மடங்களை அகற்றுவதற்கு எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

கதிர்காமத்திலுள்ள மடங்களை அரசாங்கம் அகற்றத் தீர்மானித்திருப்பதை எதிர்த்து இலங்கை இந்திய மருத்துவர் சங்கம் பிரதமருக்கு ஒருமகஜர் சமர்ப்பிப்பதென சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பெற்றது.

## காணி வரி ஏக்கருக்கு ரூ. 2.

கொழும்பு, செவ்வாய்

கிராமப் புறங்களில் காணிச் சொத்துக்களை உடையவர்கள் வருங்காலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் காணிவரி செலுத்தவேண்டும். எனத் தெரிகிறது. இதுவரை இவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 50 சத வீதமே காணிவரி செலுத்தி வந்தார்கள்.

இவ் வரிவிதிப்பு பற்றி ஸ்தலஸ்தாபனசேவைப்பகுதி கிராம சபைகளிடம் ஆலோசனை கேட்டுள்ளது.

ஸ்தலஸ்தாபன அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் நடப்பு நிதி வருடத்திலேயே மேலதிகமான இவ்வரிகளை விதிக்கமுடியாது எனக் கிராமசபைகள் கூறியுள்ளன. இவ்வரிகளுக்கு ஸ்தலஸ்தாபன அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டிய பட்டியல்கள் இன்னும் சரியாகத் தயார் செய்யப்படவில்லை எனத் ஸ்தலஸ்தாபன ஆணையாளர். உதவி ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளார்.

## ஆசிரியருக்கு பாராட்டு

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் சுமார் 37 ஆண்டுகள் சேவைசெய்து தமது 40 ஆண்டு ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாறும் கற்கோவளத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். வி. குணநாயகத்துக்குப் பாராட்டுவிழா வொன்றை நடாத்த அவரது பழைய மாணவர்களும் அன்பர்களும் ஒழுங்குசெய்கின்றனர்.

## வெலிக்கடை சிறையில் கலகம்

### 7 கைதிகள் காயம்

கொழும்பு, செவ்வாய்

சென்ற ஞாயிற்றுக் கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலையில் இரு கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஏழு கைதிகள் காயமடைந்தனர். சிறைச்சாலையில் ஏற்பட்டபலாத்காரம்சம்பந்தமாக விசாரணை செய்யப்படுவதாக உள் நாட்டு சிறைச்சாலை மேற்பார்வையாளர் குழுத்தலைவர் தெரிவித்துள்ளார் கைதிகள் கத்திகளையும் சால்வைகளையும் தங்கள் கைகலப்பின்போது உபயோகித்தனராம். காயமடைந்தவர்களில் ஒரு கைதியின் காது முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது. விசாரணை நடைபெற்று வருகிறது.

## தியத்தலாவையில் விமானத் துறை

கொழும்பு, செவ்வாய்

ஊவாமாகாணத்தில் நிறுவப்படவிருக்கும் விமானத்துறை தியத்தலாவையில் நிறுவப்படுமென்று உள் நாட்டமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. டபிள்யூ- பி. ஜி. ஆரிய தாசா தெரிவித்தார்.


சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

24-ந் திகதி வெள்ளி முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)



நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த

**எங்கள் செல்வி**

கிங்ஸ்லி (கொழும்பு)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் நடித்த

**பதிபக்தி**

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

சிவாஜி கணேசன், பண்டரிபாய் நடித்த

**திரும்பிப்பார்**

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ராமச்சந்திரன் மாதுரிதேவி நடித்த

**மந்திரிகுமாரி**


இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி '63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.